தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 184 சுபகிருது வருடம், மாசி மாதம் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(07.03.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஷஃபான் - 14, 0115 886187 - பக்கங்கள் 10 விலை ரூ.50

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த மாசி மக மகோற்சவத்தின் பஞ்சரத பவனி நேற்று இடம்பெற்றது.
(படப்பிடிப்பு: மகலன் சிவா)

தங்கத்தின் விலை வீழ்ச்சி

•கே.சுபானி

அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று உயர்ந்துள்ளதால், தங்கத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய ஒரு பவுண் தங்கத்தின் விலை ரூபா 17ஆயிரம் - 15 ஆயிரம் ரூபா வரை... 02 பக்கம்

தேர்தல் குறித்து இன்று முக்கிய பேச்சு

புத்தாண்டுக்கு முன்னர் தேர்தலை நடத்த ஆலோசனை

•நா.தினுஷா

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தீர்க்கமான கலந்துரையாடலொன்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தலைமையில் இன்று இடம்பெறவுள்ளதுடன், அதில் முக்கியமான முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

அத்துடன், எதிர்வரும் ஏப்ரல் மாதம் இரண்டாம் வாரத்தில், தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக தேர்தலை நடத்துவதற்கு ஆலோசனைகள் இடம்பெற்று வருவதாகவும் அறிய முடிந்தது.

இதேவேளை, இன்றைய தினம் தமக்கும் சந்திப்புக்கான நேரத்தை ஒதுக்கித் தருமாறு கோரி எதிர்க்கட்சிகள் ஆணைக்குழு விடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளன. 02 பக்கம்

கொழும்பில் இன்று போராட்டம்

•நா.தினுஷா

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குதல், பொருட்களின் விலை மற்றும் வரியை குறைத்தல் உள்ளிட்ட பலவேறு கோரிக்கைகளை முன்வைத்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று இன்று (07) கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இன்று நண்பகல் 12 மணியளவில் கோட்டை பிரதான புகையிரத நிலையத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே தெரிவித்தார். 02 பக்கம்

ஆளுங்கட்சிக்கு 10 வீத வாக்குகளே கிடைக்கும்!

எதிர்வு கூறுகிறார் ஜீ.எல்.

•நா.தினுஷா

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகளில், ஆளுங்கட்சிக்கு சுமார் 10 சதவீத வாக்குகளே கிடைக்கும் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், தேர்தல் முடிவடைந்து இறுதி முடிவாகும்போது அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரு கட்சிகளும் சுமார் 8 சதவீதமான... 02 பக்கம்

சிவில், அரசியல் உரிமைகள் பற்றி தெளிவுபடுத்தும் அரசு

ஜெனீவாவில் மீளாய்வுக் கூட்டம் நாளை ஆரம்பம்

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் ஆறாவது காலாந்தர மீளாய்வு, நாளையும் நாளை மறுதினமும் ஜெனீவாவில் இடம்பெறவுள்ளதாக வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சு நேற்று (06) தெரிவித்தது. இது தொடர்பிலான ஆறாவது அறிக்கை கடந்த 2019ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் திகதி மனித உரிமைகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. 02 பக்கம்

தயாசிறியின் பதவிக்கு சரத் ஏக்கநாயக்க

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. 02 பக்கம்

கமெண்ட் கந்தர்...

ஐ.நா. தீர்மானம் மீண்டும் நிராகரிப்பு

கலந்துரையாடலுக்கு தயாரென இலங்கை அறிவிப்பு

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான 51/1 தீர்மானத்தை இலங்கை மீண்டும் நிராகரித்துள்ளது. ஆனால், சபையுடன் கலந்துரையாடுவதற்கு எப்போதும் தயாராக இருப்பதாகவும் அரசாங்கம் கூறியுள்ளது. 02 பக்கம்

அரசுக்கு எதிராக தொடர் போராட்டம்

இன்று கூடி ஆராயும் தொழிற்சங்கங்கள்

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் போராட்டத்தின் அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பில் ஆராய் வதற்காக தொழிற்சங்கங்கள் அனைத்தும் கொழும்பில் இன்று (07) கூடி ஆராயவுள்ளன.

இது பற்றிய இறுதித் தீர்மானம் இன்றைய தினம் அறிவிக்கப்படுமென றிபுணர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்தது. 02 பக்கம்

24 ரயில்கள் இரத்தாயின

•நா.தினுஷா

புகையிரத சாரதிகளின் பற்றாக்குறையின் காரணமாக மட்டகளப்பு புகையிரத சேவை உள்ளிட்ட பலவேறு புகையிரதங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய, நேற்று 24 புகையிரத சேவைகள் இரத்து செய்யப்பட்டிருந்தன. 02 பக்கம்

உஷ்!

தேர்தலுக்கான நிதியை வழங்குமாறு உயர்நீதிமன்றம் தீர்மானித்தாலும் அந்த நிதியை வழங்கினால் அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்படுமெனக் கருதி உயர்நீதிமன்றத்திடம் விண்ணப்பமொன்றை செய்யவுள்ளதாம் தீர்மானித்து தரப்பு.

எரிபொருள் நெருக்கடி, அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு, சரிவரவு தட்டுப்பாடு என்பன ஏற்படலாம் என்று கூறி அதற்கான ஆதாரங்களையும் நீதிமன்றிடம் முன்வைக்கவுள்ளதாம் தீர்மானித்து. எப்படியோ இந்த விடயத்தில் நீதிமன்றத்தின் நிலைப்பாடு மாறாதென்கின்றன நீதித்துறை வட்டாரங்கள்.

ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமனம்

கலந்துரையாடக் கூடுகிறது அரசியலமைப்புப் பேரவை

•கே.சுபானி

தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக எதிர்வரும் 9ஆம் திகதி அரசியலமைப்புப் பேரவை மீண்டும் கூடவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மேலும், உறுப்பினர்களின் நியமனம் தொடர்பில் சில முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாகவும் இதன்போது சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நிதி ஆணைக்குழு, கொள் முதல் ஆணைக்குழு, கணக்காய்வு ஆணைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல்... 02 பக்கம்

சஜித் - பார்த்தசாரதி கொழும்பில் சந்திப்பு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஓய்வுபெற்ற இந்திய இராஜதந்திரி கோபாலசுவாமி பார்த்தசாரதி ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று கொழும்பில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவும் கலந்து கொண்டார்.

இலங்கையின் கடந்தகால அரசியல் மற்றும் முக்கிய விடயங்கள் குறித்து இந்த சந்திப்பில் பேசப்பட்டது. 02 பக்கம்

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் 'அரமுன' அமைப்பின் மற்றுமொரு கலந்துரையாடல் மத்தகமவில் அண்மையில் இடம்பெற்றது.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு தாமதமடையும் சாத்தியம்

இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை விடைதாள்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் காலதாமதமடையும் வாய்ப்புகள் காணப்படுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணிகளுக்காக 20 ஆயிரத்துக்கும் அதிகமான ஆசிரியர்கள் அவசியமாக இருந்தாலும் இதுவரையில் 10 ஆயிரம் ஆசிரியர்களே விண்ணப்பித்திருக்கிறார்கள். விடைத்தாள் மதிப்பீட்டுக்கான நாளாந்த கட்டணம் அதிகரிக்கப்படாமையின் காரணமாகவே, விண்ணப்பங்களில் இவ்வாறு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆசிரியர்களிடமிருந்து அதிகளவு விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில் அவர்களுக்கான நாளாந்தக் கட்டணத்தை 3,000 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் - என்று அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கும் வகையில் நேற்று கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகச் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர்தரப் பரீட்சைக்கான விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்காக விண்ணப்பிப்பதற்கான காலஎல்லை 08ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. பெப்ரவரி 22ஆம் திகதி விடைத்தாள் மதிப்பீடு செய்யவிருந்த நிலையிலேயே மீண்டும் மதிப்பீடு செய்வதற்கான விண்ணப்பக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு செய்வதற்கு 20,000 ஆசிரியர்கள் அவசியமாக இருக்கிறார்கள். ஆனால், இதுவரையில் 10,000 வரையிலான ஆசிரியர்களே விண்ணப்பித்திருக்கிறார்கள். மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படும் கட்டணம் மிகவும் குறைவாக இருப்பதாலேயே மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கான விண்ணப்பங்களில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கொரோனா காலத்தில் கூட ஆசிரியர்கள் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் விடைத்தாள் மதிப்பீடுகளை செய்திருந்தார்கள். இந்நிலையிலேயே உயர்தர பரீட்சை கடந்த 17ஆம் திகதி முடிவடைந்திருந்தது. ஆனால், இதுவரையில் விடைத்தாள் மதிப்பீடு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதனூடாக அடுத்த பரீட்சைகள் காலதாமதமடையும்.

அதற்கமைய, விடைத்தாள் மதிப்பீடு செய்யும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் போதாதுதான், ஆசிரியர்களுக்கான நாளாந்த கட்டணத்தை 3000 ரூபாவாக அதிகரிப்பதற்காக கல்வி அமைச்சராம் அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அமைச்சரவைப் பத்திரத்தில் வழமைபோல் 2000 ரூபாவுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டணம் போதாது. இந்தக் கட்டணத்தை அதிகரிக்காவிட்டால் ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் மேலும் தாமதமடையலாம் - என்றார்.

ஆணைக்குழுக்களுக்கு ...

விசாரணை ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, நீதிச் சேவை ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்ட ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்களை நியமிக்கப்படவுள்ளனர்.

ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான முதற்கட்ட பணிகள் இந்நாட்களில் நடைபெற்று வருகின்றன.

தயாசிறியின் பதவிக்கு...

சுகந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர வெளிநாட்டுக்குச் சென்றுள்ளதன் காரணமாகவே அக்கட்சியின் பிரதி பொதுச் செயலாளரான சரத் ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தங்கத்தின் விலை...

குறைவடைந்துள்ளதாக அகில இலங்கை தங்க ஆபரண சங்கம் தெரிவித்துள்ளது.

24 கரட் தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 70 ஆயிரத்து 500 ரூபாவாகவும், 22 கரட் தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 57 ஆயிரத்து 500 ரூபாவாகவும் குறைவடைந்துள்ளதாக தங்க ஆபரண சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசுக்கு எதிராக...

வரிக் கொள்கைக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் எவ்வாறான போராட்டங்களை முன்னெடுக்கலாம் என்பது தொடர்பில் இன்று நடைபெறவுள்ள ஆராய்ப்படவுள்ளதாக இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவர் ரஞ்சன் ஜோதிநாயக்க 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார்.

சிவில், அரசியல் உரிமைகள்...

இந்தக் குழுவில் சர்வதேச உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்கும் 18 சுயாதீன நிபுணர்கள் உள்ளடங்குகின்றனர். அனைத்து நாடுகள் தொடர்பிலான மீளாய்வுகளும் இந்தக் குழுவால் நடத்தப்படுகின்றன.

இலங்கையின் வேண்டுகோளுக்கிணங்க, மீளாய்வு கலந்துரையாடல் குழுவில் ஜெனீவாவிலுள்ள ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலக்க தலைமை யேற்கவுள்ளார். ஜனாதிபதி செயலகம், பொதுப் பாதுகாப்பு அமைச்சு, சட்ட மா அதிபர் திணைக்களம், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, ஜெனீவாவில் உள்ள ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தரத் தூதரகம், நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு, சுகாதார அமைச்சு, சிறைச்சாலைகள் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் போன்றவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கொழும்பில் இருந்து சிரேஷ்ட அதிகாரிகள் குழு இதில் பங்கேற்கவுள்ளது.

ஐ.நா. தீர்மானம்...

ஐக்கிய நாடுகள் சபையின் 52ஆவது அமர்வு அண்மையில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ஹிமாலி அருணாதிலக்க, மனித உரிமைகள் பேரவையால் பல பயனற்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

"ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை முன்வைத்த சர்வதேச பொறிமுறை முறைமையை மீண்டும் நிராகரிக்கிறோம். இது தொடர்பில் ஏற்கனவே சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானங்கள் தமது நாட்டு மக்களுக்கு உதவாது என்பதுடன், சமூகத்தை பிளவுபடுத்தும். மேலும் இலங்கையில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு உதவாது.

மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நாம் நிராகரித்தாலும் இது தொடர்பிலான சிறப்பு நடைமுறைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் விவாதிப்பதற்கும் தயாராக இருக்கிறோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று....

கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கம், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கம், அனைத்து பல்கலைக்கழக பிக்குகள் ஒன்றியம், வயம்ப பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கம், ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கம் உள்ளிட்ட மாணவர் சங்கங்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளன.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் வசந்த முதலிகே கருத்து தெரிவிக்கையில்,

கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை நீக்கி, முறைமையில் மாற்றமொன்றை செய்யவேண்டும் என்பதே கடந்த காலங்களில் எங்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் பிரதான நோக்கமாக இருந்தது. அவசர பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் ஜனநாயக மறுசீரமைப்பு என்பவற்றை வெற்றிகொள்வதனூடாகவே முழுமையான முறைமை மாற்றத்துக்காக சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகள் கிடைக்கின்றன.

இந்தப் பின்னணியிலேயே இன்று பாரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம். முறைமை மாற்றத்துக்காக மக்களை ஒன்றுதிரட்டவும் மாணவர்களாகிய நாங்கள் எங்களின் பங்கினை ஆற்ற விரும்புகிறோம் - என்று குறிப்பிட்டார்.

ஆளுங்கட்சிக்கு 10 வீத...

வாக்குகளையே பெற்றுக்கொள்ளும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள கதுருந்தி மக்கள் சுட்டனியின் அலுவலகத்தில் நேற்று (06) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல் ஆணைக்குழுவில் இன்று தீர்மானமிக்க கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. எனவே, தேர்தலை நடத்தும் திகதி குறித்து தேர்தல் ஆணைக்குழு இன்று உறுதியான அறிவிப்பை வெளியிட்டே ஆகவேண்டும். இதற்கப்பால் தேர்தலை காலந்தாழ்த்துவதற்கான எந்தவொரு வாய்ப்பும் இல்லை. தேர்தலை நடத்தும் திகதி இன்று முழு நாட்டுக்கும் அறிவிக்கப்படவேண்டும்.

அதேபோன்று, தேர்தலுக்கான நிதியை பெற்றுக்கொடுக்கும் திகதி குறித்து திறைசேரியுடன் ஆணைக்குழு பேச்சுவார்த்தை நடத்துவதற்கான எந்தவொரு அவசியமில்லை. அவ்வாறு கதுருவையாட முன்னெடுக்கப்படுமாக இருந்தால் அது சட்டவிரோதமானதாகவே அமையும்.

இந்தத் தேர்தலை காலந்தாழ்த்துவதற்கு செய்யக்கூடிய சகல முயற்சிகளையும் இந்த அரசாங்கம் செய்தது. அந்த சகல முயற்சிகளும் தோல்வியை சந்தித்துள்ளன. வெளி தலையீடுகளினாலும், உயர் நீதிமன்றத்தின் காரணமாகவும், அரசாங்கத்துக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் இந்தத் தேர்தலை நடத்தியே ஆகவேண்டும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தினால் நிச்சயமாக அரசாங்கம் படுதோல்வியை சந்திக்கும் என்பதாலேயே அரசாங்கம் தேர்தலை காலந்தாழ்த்த முயற்சிப்பதற்கு பிரதான காரணமாகும்.

இந்த அரசாங்கத்தின் இரு பங்காளர்களான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவையும், ஜக்கிய தேசியக் கட்சியையும் ஒன்றாக இணைத்தால் அவர்களுக்கான ஆதரவு மட்டம் 10 சதவீதம் கூட இல்லை என்பது தொழில்றுட்ப ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தெளிவான தோல்வியின் மத்தியில் இந்தத் தேர்தலை நடத்தினால் இந்த சதவீதம் இன்னும் வீழ்ச்சியை சந்திக்கும் என்பது அவர்கள் அறிந்து வைத்துள்ளதாலேயே தேர்தலுக்கு அஞ்சுகிறார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடைந்து முடிவுகள் அறிவிக்கப்படும்போது இந்த அரசாங்கத்துக்கான நாட்டில் இருக்கும் ஆதரவு 08 சதவீதத்தால் வீழ்ச்சியை சந்திக்கும். தேர்தல் முடிவுகள் வெளியாகும்போது இந்த விடயம் தெளிவாக தெரியவரும். உயர்நீதிமன்றத்தின் தலையீட்டின் மூலம் தேர்தலுக்கு உள்ள அனைத்து தடைகளையும் நீக்கியமை தேர்தல் ஆணையத்திற்கு கிடைத்த பலமான ஆதாரவு. வேட்பு மனு தாக்கல் செய்த 3500 அரச பணியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாரபட்சத்தில் தேர்தல் ஆணைக்குழு தலையிட வேண்டும்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் காரணமாக நிதி அமைச்சின் செயலாளருக்கு கதுந்திராமக செயற்படும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனை தவிர்ப்பது பாரிய தவறாகும்.

24 ரயில்கள் இரத்தாயின...

அரச ஊழியர்கள் 61 வயதுடைய ஓய்வுபெற வேண்டுமென்ற அரசாங்கத்தின் கொள்கை அடிப்படையிலான தீர்மானத்தின் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் ஒப்பந்த அடிப்படையில் சாரதிகளை இணைத்துக்கொள்வ தற்கான அனுமதியை அரச சேவை ஆணைக் குழுவிடம் கோரியிருந்தாலும், அதற்கு இதுவரையில் அனுமதி கிடைக்கப்பெறாமையின் காரணமாகவே நிலைமை மேலும் சிக்கலாகியுள் ளதாக புகையிரத திணைக்களத்தின் பிரதி முகாமை யாளர் எம்.ஜே.இந்திபொவே தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புகையிரத சாரதிகளுக்கான பதவி வெற்றிடங்கள் அதிகரித்துள்ளதால், தூரபிரதேசங்களுக்குச் செல்லும் புகையிரத சேவைகளை இரத்துசெய்ய நேரிந்திருந்தது. கடந்த டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் 60 வயது பூர்த்தியான 09 சாரதிகள் ஓய்வுபெற்றுச் சென்றிருந்தார்கள். மேலும் ஓப்பந்த அடிப்படையில் பணியாற்றிவந்த 33 வரையிலான சாரதிகளின் ஒப்பந்தங்கள் நிறைவு செய்யப்பட்டிருந்ததாலும் சாரதிகளுக்கான பதவி வெற்றிடம் ஏற்பட்டிருந்தது.

நடப்பாண்டின் இதுவரையான மூன்று மாத காலப்பகுதியில் 05 வரையான சாரதிகள் ஓய்வுபெறுவதற்கு சென்றிருக்கிறார்கள். இந்த காரணங்களினால் சாரதிகளுக்கு பெரும் கேள்விநிலை ஏற்பட்டுள்ளது. எது எவ்வாறாயினும் சில பிரதேச மட்டத்திலான புகையிரதங்களை இரத்துசெய்யும் விசேட புகையிரதங்கள் மற்றும் அலுவலக புகையிரத தங்களை வழமைபோல் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மட்டக்களப்பு வரையில் நாளாந்தம் 03 புகையிரதங்கள் சேவையில் ஈடுபடுகின்றன. அவற்றில் ஒரு புகையிரத்தை சேவையிலிருந்து இரத்துசெய்யும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் சேவைக்கால வயது 65 என்று குறிப்பிடப்பட்டிருந்தபோது அதனடிப்படையிலேயே எங்களின் நடவடிக் கைகளை முன்னெடுத்திருந்தோம். இடையில் வயதெல்லையை 61 ஆக குறைத்தபோது, புகையிரத திணைக்களத்துக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இற்கு மாற்று தீர்வாக ஒப்பந்த அடிப்படையில் சாரதிகளை இணைத்துக்கொள்வதற்கான அனுமதியை அரச சேவை ஆணைக்குழுவிடம் கோரியுள் ளோம். அதற்கு இதுவரையில் அனுமதி கிடைக்கப் பெறாமையின் காரணமாகவே நிலைமை மேலும் சிக்கலாகியுள்ளது.

60 வயதுக்கு மேற்பட்ட சாரதிகளை மீண்டும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணைத் துக்கொள்ள நடவடிக்கை எடுத்தால் இந்தப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும். அலுவலக புகையிரதங்கள் தடைசெய்யப்படாது. அதற்கான அவசியமில்லை. மட்டக்களப்புக்கான புகையிரத சேவை உள்ளிட்ட பொதிகள், பொருட்கள், பயணிகளை ஏற்றிச்செல்லும் கலப்பு புகையிரத சேவைகள் சிலவே நிறுத்தப்பட்டுள்ளன. இது பண்ட போக்குவரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும். எரிபொருள் புகையிரதங்களை தடை செய்யாமல் தொடர்ந்து முன்னெடுக்கவே எதிர்பார்த்துள்ளோம்.

சீதாவக்க ஒடிசி புகையிரத்தில் தொழிலுட்பக் கோளாறு குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. குறிப்புளைய்வுத் தினைக்களமும் இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது - என்றார்.

சஜித் - பார்த்தசாரதி...

முக்கிய இராஜதந்திரி பார்த்தசாரதி

1983 கறுப்பு ஜூலைக்குப் பிறகு அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி இலங்கையில் முரண்பட்டு நிற்கும் இரு தரப்பினருக்கும் இடையே மத்தியஸ்தம் செய்வதற்கு இந்தியாவின் நல்லெண்ண உதவிகளை வழங்க முன்வந்தார். அந்த மத்தியஸ்த முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஆற்றல் வாய்ந்த விசேட தூதுவர் ஒருவரை நியமிக்கவேண்டியிருந்தது. அதற்குப் பொருந்து துவராக இராஜதந்திர பதவிகள் பலவற்றை வகித்தவரும் முன்னாள் வெளியுறவுச் செயலாளருமான கோபாலசுவாமி பார்த்தசாரதியை இந்திரா காந்தி அடையாளம் கண்டார்.

இந்திரா காந்தியின் நம்பிக்கைக்கு பெரிதும் பாத்திரமானவர் பார்த்தசாரதி என்பது ஒரு மேலதிக அலுவலாகவும் இருந்தது. வெளிநாட்டுக் கொள்கையிலும் உள்நாட்டுக் கொள்கையிலும் சர்சைக்குரிய விவகாரங்கள் தொடர்பில் அடிக்கடி அவருடன் திருமதி காந்தி ஆலோசனை கலப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிராந்திய சபைகளுக்கு (Regional Councils) அதிகாரப்பரவலாக்கலுக்கான ஒரு தொகுதி யோசனைகள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்திய பார்த்த சாரதியின் தனித்துவமான பங்களிப்பாகும். அந்த யோசனைகளே 'இணைப்பு சி' (Annexure - C) என்று பிரபல்யமாக அழைக்கப்படுபவையாகும். 1983 ஒகஸ்ட் தொடக்கம் டிசம்பர் வரையான 4 மாத காலகட்டத்திற்குள் கொழும்பிலும் புதுடில்லியிலும் ஜனாதிபதி ஜெயவர்தனவுடன் நடத்திய சந்திப்புகளில் இந்த இணைப்பு சியைப் பூரணப்படுத்தும் செயற்பாடுகளை பார்த்தசாரதி நிறைவுசெய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் குறித்து...

நீதிமன்றத்தின் வழக்கு தீர்ப்புக்கமைய, நிதி அமைச்சு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்ற திகதியை எதிர்வரும் 09ஆம் திகதிக்கு முன்னர் அறிவிப்பதாக தேர்தல் ஆணைக்குழு கடந்த 03ஆம் திகதி அறிவித்திருந்தது. இந்நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான திகதியை தெரிவுசெய்வது தொடர்பான முக்கிய கலந்துரையாடலொன்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தலைமையில் இன்று இடம்பெறவுள்ளது.

அதற்கமைய, திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, அரசாங்க அச்சகர் ஜீ.கே.டி. யினகே, பொலிஸ் மா அதிபர் சி.டீ.விக்ரமரத்ன ஆகியோருடன் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் இன்று (07) தமக்கும் கலந்துரையாடலொன்று பெற்றுக்கொடுக்குமாறு கோரி அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணைக் குழுவுக்கு நேற்று முன்தினம் (05) கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளன.

அந்தக் கடிதத்தில், தேர்தலை நடத்துவதற்கான நிதியை தடுத்துவைத்துள்ள நிதி அமைச்சு, திறைசேரியின் செயலாளர் உள்ளிட்ட ஏனைய நிறுவன்களின் இறுதி முடிவை எதிர்வரும் 09ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. வாக்குச் சீட்டை அச்சிடுவது தொடர்பில் அரசாங்க அச்சகத்துக்கு மேலும் உத்தரவிட்டுள்ளது.

அதேபோன்று தேர்தல் ஆணைக்குழுவும் தேர்தலை திகதி குறித்து 06 அல்லது 07ஆம் திகதிகளில் இறுதி முடிவை அறிவிப்பதாக அறிவித்துள்ளது. சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தியே ஆகவேண்டும். திறைசேரியின் செயலாளர் மற்றும் அரசாங்க அச்சகம் என்ற தமக்கு ஒத்துழைக்கவில்லை என்பது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவுக்கும் உயர் நீதிமன்றம் தெளிவான முடிவை அறிவித்திருக்கிறது.

எனவே, தேர்தலை காலந்தாழ்த்துவதற்கு தடையாக இருந்த பிரச்சினைகளை சரிசெய்வதற்கு சிறந்த தீர்வையும் பெற்றுக்கொடுத்துள்ளது. மார்ச் 19ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்தியே ஆகவேண்டும். நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் திறைசேரியோ அல்லது அச்சகமோ தேர்தல் நடவடிக்கைகளுக்கு தடையாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆகவே, தேர்தலை நடத்துவதற்கான திகதியை 20ஆம் திகதிக்கு முன்னர் தீர்மானித்தே ஆகவேண்டும்.

மேலும், எதிர்வரும் 07ஆம் திகதி (இன்று) காலை 9.00 மணிக்கு கலந்துரையாடலொன்றை மேற்கொள்ள தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் அந்தக் கடிதத்தில் கட்சிகள் கட்டுக்காட்டியுள்ளன.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர்ரிஷாட் பதியுதீன், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவுப் ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் கையொப்பமிட்டு இந்தக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளனர்.

அதன் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட குழுவினருக்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் விசேட பேச்சுவார்த்தையொன்று இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மிக விரைவில் தேர்தலை நடத்துவதற்கான திகதியொன்றை அறிவிக்குமாறு கோரி தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு தேசிய மக்கள் சக்தியும் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

வெளிவிவகார அமைச்சுசார் பதவிகளைப் பெற ஆளும் கட்சி அரசியல்வாதிகளால் கடும் அழுத்தம்

பல்வேறு ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் பிள்ளைகள் மற்றும் உறவினர்களை இராஜதந்திர பதவிகளுக்கு நியமிப்பதற்காக மீண்டும் அரசியல்வாதிகளின் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டிலுள்ள 55 இலங்கை தூதரகங்கள் மற்றும் கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சு ஆகிய இரண்டிலும் 98 வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

அரசாங்கத்துடன் தொடர்புள்ள அரசியல்வாதிகளின் பிள்ளைகள் உட்பட தமது உறவினர்களுக்கு பதவிகளைப் பெற்றுக்கொடுக்க அரசியல்வாதிகள் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரியவருகிறது.

வெளிவிவகார அமைச்சுசார் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 264 ஆகும். இருப்பினும், அவற்றில் 166 வெற்றிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டதால், 98 வெற்றிடங்கள் உள்ளன. இந்நிலையிலேயே குறித்த வெற்றிடத்தை நிரப்ப அரசியல்வாதிகள் முயல்வதாக தெரியவருகிறது.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவின் மகனும், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் நெருங்கிய உறவினரும் பதவிகளை கோரியவர்களில் அடங்குவதாக தெரியவருகிறது.

நாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ள 83 இலட்சத்து 50 ஆயிரம் வாகனங்களில் 20 இலட்ச வாகனங்களின் தகவல்கள் இல்லை

(எவ்.எம்.அஸ்லம்)

நாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ள 83 இலட்சத்து 50 ஆயிரத்து 11 வாகனங்களில் சுமார் 20 இலட்சம் வாகனங்கள் பற்றிய தகவல்கள் எதுவுமில்லையென மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

1970ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள், தமிழீழ விடுதலைப் புலிகளினால் கொள்ளையடிக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் பல்வேறு விபத்துகளில் அழிக்கப்பட்ட வாகனங்கள் உள்ளிட்டவை இந்த வாகனங்களில் அடங்கும்.

வாகனங்களின் வருமான உத்தரவுப் பத்திரத்தைப் பெறுவதற்கு புகைப் பரிசோதனை சான்றிதழ் கட்டாயமாகும். அந்தவகையில் மோட்டார் போக்குவரத்துத்துறையின் வாகன புகைப்பரிசோதனைப் பிரிவின் கட்டுப்பாட்டின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள வாகனங்களின் புகைப்பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

ஆனால், வருடத்துக்கு 55 இலட்சம் வாகனங்கள் மட்டுமே புகைப் பரிசோதனைக்கு பரிந்துரைக்கப்படுவதாக புகைப் பரிசோதனைப் பிரிவின் பணிப்பாளர் பொறியாளர் ஐ.ஜி.தசுன் ஜானக தெரிவித்தார்.

இந்த 55 இலட்சம் வாகனங்கள் தவிர, 10 இலட்சம் மின்சார வாகனங்கள் மட்டுமே இருப்பதாகவும், மொத்த வாகனங்களின் எண்ணிக்கை சுமார் 65 இலட்சம் என்றும், ஏனைய 20 இலட்சம் வாகனங்கள் குறித்து எந்தத் தகவலும் இல்லை என்றும் பணிப்பாளர் கூறினார்.

நாட்டில் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களில் மோட்டார்சைக்கிள்களே அதிகமாக உள்ளன. அதாவது 48 இலட்சத்து 38 ஆயிரத்து 505 மோட்டார் சைக்கிள்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மேலும் 11 இலட்சத்து 84 ஆயிரத்து 370 முச்சக்கரவண்டிகளும் 09 இலட்சத்து இரண்டாயிரத்து 175 மோட்டார் கார்களும் அதிகமாக பதிவுசெய்யப்பட்ட வாகனங்களில் அடங்குகின்றன.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து தப்பிச்சென்ற கொலையாளிக்கு தங்குமிடம் கொடுத்த தம்பதி கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொலிஸாரிடமிருந்து தப்பிச்சென்ற 'பூறு மூனா' என்ற கொலைச் சந்தேகநபருக்கு தங்குமிட வசதி வழங்கிய தம்பதியினர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நுவரெலியாவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 35 வயதான கடற்படை அதிகாரி ஒருவரும் உள்ளடங்குவதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். குறித்த பெண் 32 வயதுடையவர் எனவும், அவர்கள் முன்னர் கொலையாளி கைதுசெய்யப்பட்டவுடன், ஹொரணை மில்லனியா பகுதியில் வசித்து வந்த நிலையில் தலைமறைவாகியிருந்தமை தெரியவந்துள்ளது.

முன்னதாக, தப்பியோடிய கொலைச் சந்தேகநபர் நாட்டைவிட்டு தப்பியோடிய நிலையில், நான்கு பொலிஸ் அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டனர். சந்தேக நபர் 9 கொலைகளை செய்துள்ளதாகவும், போலியான கடவுச்சீட்டில் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முயன்றதாகவும் கூறப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட தம்பதியினர், சந்தேகநபருக்கு தங்குமிட வசதி செய்து கொடுத்தது மட்டுமன்றி, சந்தேக நபர் வேறு நாட்டுக்கு தப்பிச் செல்வதற்காக போலி கடவுச்சீட்டு தயாரித்து தருவதற்கும் பணம் வழங்கியமை தெரியவந்தது.

சிசிரிவி காட்சிகள் மூலம் சேகரிக்கப்பட்ட தகவலைத் தொடர்ந்து தம்பதியினர் கைது செய்யப்பட்டனர். சந்தேகத்திற்குரிய தம்பதியினர் நீர்கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

புதையல் தோண்டிய மூவர் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

அநுராதபுரம் திறப்பனை பகுதியில் புதையல் தோண்டிக்கொண்டிருந்த மூவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய நேற்று முன்தினம் (05) இரவு திறப்பனை பொலிஸ் பிரிவின் குடாகனுமுல்ல பகுதியில் சுற்றிவளைப்பினை மேற்கொண்டு சந்தேகநபர்கள் மூவரை கைதுசெய்துள்ளனர்.

ஸ்கேனர் இயந்திரம் மற்றும் புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களையும் சந்தேக நபர்கள் வந்திருந்த ஜீப் ஒன்றையும் திறப்பனை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 30, 53, 58 வயதுகளையுடைய திறப்பனை மற்றும் ஹம்புறுககல பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். சுற்றிவளைப்பின்போது தப்பிச்சென்ற மேலும் மூவரை கைதுசெய்வதற்காக திறப்பனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நல்லூர் மந்திரிமனைக்குள் நுழைய அனுமதி மறுப்பு

நல்லூரில் அமைந்துள்ள மந்திரிமனைக்குள் நுழையவேண்டாம் என பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை தொல்பொருள் திணைக்களத்தினால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இராசதானியை ஆண்ட சங்கிலிய மன்னனது மந்திரிமனை நல்லூரில் சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ளது.

அந்தக் கட்டடம் உடைந்து விழும் நிலையில் உள்ளது.

அதற்கு முட்டுக்கொடுத்து கம்பிகள் நடப்பட்டுள்ளன. இதனால் அதற்குள் யாரையும் நுழையவேண்டாம் என தொல்பொருள் திணைக்களம் அறிவித்துள்ளது.

மாமனிதர் கிட்ணன் சிவநேசனின் 15ஆம் ஆண்டு நினைவு தினம்

மட்டு. வவுணதீவில் அனுஷ்டிப்பு

(கனகராசா சரவணன்)

படுகொலை செய்யப்பட்ட யாழ். மாவட்ட முன்னாள நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் கிட்ணன் சிவநேசன் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று (06) மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்தில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் ஏற்பாடுசெய்யப்பட்ட நினைவேந்தல் வவுணதீவு நாவல்தோட்டம் மாரியம்மன் ஆலயத்தின் முன்னால் இடம்பெற்றது.

இதில் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டுள்ளனர்.

இதன்போது மாமனிதர் கிட்ணன் சிவநேசன் திருவுருவப்படத்திற்கு மாவீரர் கங்காவின் தாயாரான தம்பிபோடியார் அமராவதி ஈகைச்சுடர் ஏற்றியதையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் மலர்மாலை அணிவித்ததுடன், கலந்துகொண்டவர்கள் அன்னாரது ஆத்ம சாந்தி வேண்டி மலர் தூவி இரண்டு நிமிட அஞ்சலி செலுத்தினர்.

வண்ணார்பண்ணை கன்னாத்திட்டி ஸ்ரீ காளியம்பாள் ஆலய தேர்த் திருவிழா

(யாழ்., வட்டுக்கோட்டை நிருபர்கள்)

வரலாற்று சிறப்புமிக்க வண்ணார்பண்ணை கன்னாத்திட்டி ஸ்ரீ காளியம்பாளின் இரதோற்சவம் நேற்று (06) பக்திபூர்வமாக இடம்பெற்றது.

கருவறையில் வீற்றிருக்கும் ஸ்ரீ காளியம்பாளுக்கும் விநாயகர், முருகன் ஆகிய தெய்வங்களுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் என்பன இடம்பெற்று, காளியம்பாள் தனியாக வசந்த மண்டபத்திலிருந்து எழுந்தருளிய உள்வீதியூடாக வலம்வந்து வெளிவீதியூடாக தேரேரி பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

இதில் ஆண்கள், பெண்கள் என அனைவரும் அம்பாளின் திருத்தேரின் திருவடத்தினைபிடித்து தேரினை இழுத்துச் சென்றனர். இதன்போது அடியவர்கள் கற்பூரச்சட்டி எடுத்தும், பால்குடம் எடுத்தும் தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றிக்கொண்டனர்.

கடந்த 26.02.2023அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய மகா உற்சவம் இன்று (07) தீர்த்தோற்சவத்துடனும், மாலை கொடியிறக்கத்துடன் இனிதே நிறைவடையும்.

இந்த உற்சவத்தில் பல பாகங்களில் இருந்து வருகைதந்த பக்தர்கள் கலந்துகொண்டு இஷ்ட சித்திகளை பெற்றுச்சென்றனர்.

தினசரி பலாபலன்கள்

சுபகிருது வருடம் மாசி மாதம் 23ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

- மேஷம் — புத்திரர்களால் வீண் பிரச்சினைகள் உருவாகலாம்,தேவையற்றசெலவுகள் மன நிம்மதியைக் கெடுக்கும்.
- ரிஷபம் — வீடு வாகனங்களால் வீண் செலவினங்கள், தொல்லைகள் ஏற்படலாம். தாய்க்குப் பீடை.
- மிதுனம் — மனத்துணிவுடன் எதையும் சாதிப்பீர்கள், நண்பரிடமிருந்து நீங்கள் உதவிகள் கிடைக்கும்.
- கடகம் — வீண் பேச்சை தவிர்த்துக் கொள்ளுங்கள், கட்டாயச் செலவினங்களால் தொல்லைகள் உண்டு.
- சிம்மம் — உடல் நோய்கள் குணமடையும் நாள், எந்தச் சவால்களையும் முறியடிப்பீர்கள்.
- கன்னி — வெளியிடத்தில் அல்லது குடும்பத்தில் அவமானம் ஏற்படும், வீண் அலைச்சல்களால் உடல் அசதி.
- துலாம் — கடந்த நாட்களில் உங்கள் கைநழுவிப் போனவை மீண்டும் கிடைக்கும், புதிய நண்பர்களை சந்திப்பீர்கள்.
- விருச்சகம் — புகழ், கீர்த்தி,செல்வாக்கு உயரும், செய் தொழிலில் திட்டமிட்ட இலாபங்களை அடைவீர்கள்.
- தனுசு — தடைப்பட்டிருந்த உங்கள் வெளி நாட்டுப் பயணம் சிறப்பாக அமையும். பூர்வீக சொத்துகளால் சங்கடங்கள் தோன்றும்.
- மகரம் — கடுமையான அலைச்சளுடன், காரியக் கேடும் ஏற்படும், கோபத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள்.
- கும்பம் — நீண்ட நாள் காதலியை சந்திப்பீர்கள், பங்கு வியாபாரத்தில் எண்ணிய இலாபத்தை அடைவீர்கள்.
- மீனம் — நோயிலிருந்து விடுதலை, நீண்ட நாள் சத்துருக்கள் உங்களிடம் பணிவாக நடந்துகொள்வார்கள்.

திதி : பௌர்ணமி பி.ப. 6.10 வரை பின் பிரதமை

நட்சத்திரம் : பூரம் பி.இ.2.22 வரை பின் உத்தரம்

யோகம் : சித்தாமிர்த யோகம் (சுப காரியம் நன்மை)

வார சூலை : மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

நல்ல நேரம் : மு.ப. 8.22 – 9.22 மணி வரை

ராகு காலம் : 3.22 – 4.52 மணி வரை

எமகண்டம் : 9.22 – 10.52 மணி வரை

குளிகை : 12.22 – 1.52 மணி வரை

சந்திராஷ்டமம் : மகர ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

தன அதிஷ்டம் : அசுவினி, மகம், மூலம் (பிறந்தவர்களுக்கு)

விஷேட தினம் : பூரணை விரதம்

கணிப்பு : சிவா பாஸ்கரராவ்
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

கால்நடை நோய்த்தாக்கம் குறித்து சுகாதாரத் திணைக்களம் விசாரணை

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி, கரைச்சி ஆகிய பகுதிகளில் கால்நடைகளுக்கு பரவி வரும் நோய்த்தாக்கம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெரியம்மை வகையிலான நோய்த் தாக்கமே இவ்வாறு கால்நடைகளிடம் கண்டறியப்பட்டுள்ளது. இது தொடர்பில், கால்நடை பண்ணையாளர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில், கிளிநொச்சி மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் ஊடாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி, இயக்கச்சி, பளை, உருத்திரபுரம், நீவில் போன்ற பகுதிகளில் உள்ள பெரும்பாலான கால்நடைகளுக்கு இந்த நோய் தொற்று பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாணின் விலையை 100 ரூபாவாக குறைக்க நடவடிக்கை

பேக்கரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் ஜயவர்தன

பாணொன்றின் விலை 100 ரூபாவாக குறைக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் பேக்கரி பொருட்களின் விலைகளை குறைப்பதைத் தவிர, வேறு எந்த திட்டமும் இல்லையெனவும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

இதற்கு அரசின் ஆதரவை எதிர்பார்க்கிறோம் என்றும், பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலையை குறைத்தால் மட்டுமே தற்போது முடங்கியுள்ள பேக்கரி தொழிலை மீட்டெடுக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

தற்போது பாணொன்று 150 ரூபா – 170 ரூபாவுக்கும், சில பகுதிகளில் 180 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. நுகர்வோர் அந்த விலை கொடுத்து வாங்க முடியாததனால்தான் பாணின் விற்பனை 20 முதல் 25 சதவீதம் குறைந்துள்ளது - என்றார்.

மின்கட்டண உயர்வு காரணமாக, பேக்கரி தொழில் பெருமளவில் பாதிக்கப்பட்டு, தொழில் நலிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. பேக்கரி தொழிலை பராமரிக்க வேண்டிய அவசியத்தால், பேக்கரி உரிமையாளர்கள் அசௌகரியத்துக்கு உட்பட்டுள்ளதாகவும், பேக்கரி தொழிலை பாதிக்கும் பல்வேறு பிரச்சினைகளால், 7,000 பேக்கரிகளில், 5,000 பேக்கரிகளும் மூடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு 500 மில்லியன் ரூபா நட்டம்

தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் வீதிமறியல் போராட்டங்கள் காரணமாக 500 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் இன்று (07) பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்க வுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வரலாற்றுப் பிரசித்திமிக்க மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த மாசி மக மகோற்சவத்தின் பஞ்ச ரத பவனி நேற்று (06) இடம்பெற்றது. (படப்பிடிப்பு: மகலன் சிவா)

தமிழன்
THAMILAN தமிழன்
நமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜோரோ மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 6187
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamileditorial@gmail.com/ thamileditor@gmail.com
2023, மார்ச் 07ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

தேர்தலில் போட்டியிடும் அரச பணியாளர்களின் நிலைமை!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் 3000க்கும் மேற்பட்ட அரச ஊழியர்களுக்கு தேர்தல் ஆணைக்குழுவால் நிவாரணம் வழங்க முடியவில்லை.

தேர்தல் சட்டத்திற்கு அமைவாக, எதிர்வரும் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுவதற்காக அரச பணியாளர்கள் பணியிடங்களில் இருந்து சம்பளமில்லாத விடுப்பு எடுத்துள்ளனர். மார்ச் 9ஆம் திகதி திட்டமிட்டபடி தேர்தலை நடத்த முடியாது என்பதால், இந்த வேட்பாளர்களில் பலர் கடினமான சூழ்நிலையை எதிர்கொள்கின்றனர், ஏனெனில், அவர்கள் தேர்தல் செயல்முறை நடந்து கொண்டிருப்பதால் அவர்கள் வேலைக்குத் திரும்புவது தடைசெய்யப்பட்டுள்ளது.

மார்ச் 9ஆம் திகதி திட்டமிட்டபடி தேர்தலை நடத்த முடியாத நிலையில், தேர்தல் நடைமுறைகள் நிறுத்தப்படவில்லை என்றும் தேர்தல் ஆணையம் இந்த வேட்பாளர்களுக்கு நிவாரணம் வழங்க முடியாது என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார் .

தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல் ஆணையத்திற்கு தடை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தால், இந்த ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை வழங்குவதற்கான அமைச்சரவை முன்மொழிவை சமர்ப்பிக்க பொது நிர்வாக அமைச்சிற்கு ஆணையம் பரிந்துரைக்கலாம். ஆனால், நீதிமன்றம் அப்படி எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை மேலும், தேர்தலைத் தொடர தேர்தல் ஆணையத்தை கேட்டுக் கொண்டுள்ளது. எனவே, ஆணையம் அத்தகைய பரிந்துரையை வழங்க முடியாது என்று தேர்தல் ஆணையத்தின் தலைவர் கூறியுள்ளார். ஆனால், தேர்தலில் போட்டியிடும் அரசாங்கப் பணியாளர்கள் தேர்தல் திகதி மேலும் இழுத்தடிக்கப்பட்டால் என்ன செய்வது என்ற எந்த முன்னேற்பாடுகளும் இல்லை.

அரசாங்கப் பணியாளர்கள் தேர்தலில் போட்டியிடுவது இன்று நேற்று ஆரம்பித்ததல்ல. அது காலாகாலம் தொடரும் ஒரு விடயம். ஆனால், எந்தக் காலத்திலும் தேர்தல் இந்தளவு தூரம் இழுத்தடிக்கப்படவில்லை என்பதால் இது தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் என்று முன்னுதாரணமாக எதுவும் இல்லை. தேர்தலொன்றில் போட்டியிட தகுதிவாய்ந்த அரச பணியாளர்கள் தீர்மானிப்பது நல்ல விடயம் என்றாலும், இப்போது இடம்பெறும் செயற்பாடுகளை நோக்குகையில் எதிர்காலத்தில் தேர்தல் என்று அறிவித்தாலே அந்தப்பக்கம் திரும்பாமல் அரச பணியாளர்கள் ஓட்டமெடுக்கும் நிலையே இருக்கிறது. இது ஏற்புடையதல்ல.

தேர்தல் ஆணைக்குழு இன்று அரசியல் கட்சிகளின் பிரமுகர்களுடன் பேச்சு நடத்துகிறது. இவ்வாரம் திறைசேரி உட்பட இதர அரச முக்கிய நிறுவனங்களுடனும் தேர்தல் ஆணைக்குழு ஆலோசனைகளை நடத்தவுள்ளது. இந்த பேச்சுகளின் பின்னர் தேர்தல் உடனடியாக நடந்தால் நல்லது. ஆனால், எக்காரணம் கொண்டாவது தேர்தல் நீண்டகாலத்திற்கு ஒத்திவைக்கப்படுமாக இருந்தால், அரச பணியாளர்கள் தொடர்பிலும் ஆக்கபூர்வமான முடிவை தேர்தல் ஆணைக்குழு எடுக்க வேண்டும். தேர்தலில் இறங்கியதால் ஊதியம் இல்லாமல் போனது என்ற விரக்தி நிலைமை அரச பணியாளர்களுக்கு உணர்த்தப்படுவதானது ஜனநாயக மாண்புகளுக்கும் முரணானது என்பதை தேர்தல் ஆணைக்குழு கவனத்திற்கொள்வது நல்லது. ஜனநாயகத் தேர்தலொன்றில் பங்களிப்பை செலுத்துவது அனைவருக்கும் உள்ள உரிமை.

அந்த பங்களிப்பினால் பாதிப்புகள் ஏற்படாதென உறுதிப்படுத்துவது ஜனநாயக அமைப்புகளின் பொறுப்பும் கடமையும் கூட. அந்த வகையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு விண்ணப்பித்துள்ள அரச பணியாளர்கள் தொடர்பில் நியாயமான நிலைப்பாடொன்றை தேர்தல் ஆணைக்குழு மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம். நாட்டின் இப்போதைய பொருளாதார சூழ்நிலையில் அரச பணியாளர்களின் நிலை 'பானையிலிருந்து அடுப்பில் இருந்து விழுந்த கதை' ஆகிவிடக்கூடாது.

புதினங்களும் திரைப்படங்களும்!

முனைவர் இரா.கற்பகம்

இலக்கியம் என்பது, பேச்சு, பாடல், உரைநடை, புதினம் என்று வளர்ச்சியடைந்து திரைப்படம் என்ற வடிவம் பெறப் பன்னெடுங்காலம் ஆனது. இந்தப் பரிணாம வளர்ச்சியில் புதினங்கள் முதலிலும் அதற்குப் பின்னர் திரைப்படங்களும் தோன்றின. ஏற்கெனவே எழுதப்பட்ட புதினங்களுக்குத் திரைவடிவம் கொடுத்து பெருகூட்டி வெளியிடுவது எளிதாக இருந்தது. அப்படி வெளியிடப்பட்ட திரைப்படங்கள் மக்களிடையே மிகுந்த வரவேற்பும் பெற்றன.

அன்றிலிருந்து இன்று வரை தமிழ்த்திரை உலகத்துக்குப் புதினங்களின் மீது ஒரு தீராத மோகம் ஏற்பட்டு விட்டிருக்கிறது என்றே சொல்லலாம். புதினங்களுக்கு திரை வடிவம் கொடுப்பதில் சில சௌகரியங்கள் இருந்தன.

தனியே வசனங்கள் எழுத வேண்டி இருக்கவில்லை. புதினங்களில் கையாளப்பட்டிருந்த உரையாடல்களையே தேவைக்குத் தக்கவாறு சிறிது மாற்றித் திரையில் வசனமாகக் கொடுத்துவிட முடிந்தது. கதையை எப்படி முடிப்பது என்று யோசிக்க வேண்டியிருக்கவில்லை. புதினத்தில் உள்ள முடிவை அப்படியே படத்திலும் வைத்தார்கள்.

இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களும் சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களும் புராணக் கதைகளும் உரைநடை வடிவிலிருந்து திரைவடிவத்துக்கு மாறியபோது பாமர மக்களிடம் எளிதில் சென்றடைந்தன.

பிறகு சரித்திரப் படங்கள் வரத்தொடங்கின. தேசிங்கு ராஜா, வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், விடுதலைப் போராட்ட வரலாற்றுப் பின்னணி கொண்ட படங்கள் என்று வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையில் பல திரைப்படங்கள் வெளிவந்து வெற்றிநடை போட்டன.

தமிழில் வரலாற்றுப் புதினங்கள் அப்போது எழுதப்படவில்லை. அதனால் பிற மொழிகளில் எழுதப்பட்ட வரலாற்றுப் புதினங்களைத் திரைப்படங்களாக்கினார்கள். இங்கிலாந்து நாட்டின் வரலாற்றையும் பிரெஞ்சு நாட்டின் வரலாற்றையும் அப்படியே தமிழில் கொடுத்தால் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று தமிழ்நாட்டுக் கலாரசார்த்துக்கும் பண்பாட்டுக்கும் ஏற்றவாறு மாற்றங்களைச் செய்து வெளியிட்டார்கள்.

பக்கம் பக்கமாக வசனங்கள், எண்ணற்ற பாடல்கள் இருந்தாலும், தெளிவான தமிழ் உச்சரிப்பும் இறமையான நடிப்பும் கொண்ட நடிக நடிகையர்களாலும் பாடகர்களாலும் இப்படங்கள் அமோக வெற்றியைப் பெற்றன. 'தி மேன் இன் தி அயர்ன் மாஸ்க்' புதினம், தமிழில் உத்தமபுத்திரன் என்று மாறியது. பிரெஞ்சு சரித்திரத்தில் அது உண்மைக் கதை. அலெக்ஸண்டர் டூமாஸ் ஐந்து பாகங்களாக எழுதிய நெடுங்கதையின் இறுதிப் பாகம்.

உண்மை வரலாற்றை மாற்றி எழுத முடியாது. என்றாலும், வேற்று நாட்டின் வரலாறு இங்கே யாருக்குத் தெரிந்திருக்கப் போகிறது என்று தைரியமாக மாற்றினார்கள். 'தி கவுண்ட் ஒப் மாண்டி கிறிஸ்டோ' - வஞ்சிக்கோட்டை வாலிபன் என்றும் 'தி ப்ரிஸனர் ஒப் ஜெண்டா' - நாடோடி மன்னன் என்றும் உருமாறி வெற்றி பெற்றன.

பிறகு கற்பனை இராஜ்ஜியங்களும் மன்னர்களும் கொண்ட மனோகரா, சக்கரவர்த்தித் திருமகள் போன்ற சரித்திரப் படங்கள் வெளிவந்தன. அதற்கு அடுத்தபடியாக மலைக்கள்ளன், தில்லானா மோகனாம்பாள் போன்ற சமூக புதினங்களும் திரைவடிவம் பெற்றன. பிற மொழிகளிலிருந்தும் புதினங்களைத் திரை வடிவிற்குக் கொண்டு வந்தார்கள். அப்போது தமிழ் மண்ணிற்கேற்றவாறு பல மாற்றங்களைச் செய்தே வெளியிட்டார்கள்.

அம்மாற்றங்களை நியாயப்படுத்த, "இப்படம் இக்கதையைத் தழுவி எடுக்கப்பட்டது" என்று அறிவிப்பு போட்டார்கள். தாகூரின் 'தி ரெக்' என்ற வங்கப் புதினம் பாகுபலக்ஷ்மி என்று வெளிவந்தது. மூலக்கதை காணாமல் போனாலும் நடிகர்களின் அருமையான நடிப்பாலும் இனிமையான பாடல்களாலும் வெற்றி பெற்றது. மூலக்கதையைப் படித்தவர்களுக்கு கதையே மாறிவிட்டதே என்ற ஏமாற்றம் ஏற்படலாம். ஆனால், கதையைப் படிக்காதவர்களுக்கு எந்தவித ஏமாற்றமும் இருக்கப் போவதில்லையே!

பின்பு தமிழில் வரலாற்றுப் புதினங்கள் வெளிவரத் தொடங்கின. தமிழின் முதல் வரலாற்றுப் புதினம் சரவணமுத்துப் பிள்ளை எழுதிய மோகனாங்கி. கலிவன் எழுதிய சேரமாதேவி, ஏ.பி. நாகராஜன் எழுதிய கலையரசி போன்ற வரலாற்றுப் புனைவுகள் அதிகம் பேசப்படவில்லை. கல்கி எனப்படும் கல்கி கிருஷ்ணமூர்த்தியே தமிழில் 'வரலாற்றுப் புதினம்' என்னும் வடிவத்தை பிரபலமடையச் செய்தார்.

அவரது வரலாற்றுப் புதினங்களான சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன், பார்த்திபன் கனவு ஆகியவையே தமிழில் வரலாற்றுப் புனைவுகளுக்கு அடித்தளமிட்டன. சரித்திர வல்லுநர் நீலகண்ட சாஸ்திரி, ''இந்தியாவின் வரலாற்றை ஆவணப்படுத்திய பலர் தென்னிந்தியாவை மொத்தமாகப் புறக்கணிக்க முக்கிய காரணம், தென்னிந்திய வரலாற்றுப் பதிவுகள் அதிகம் கிடைக்காததே'' என்று கூறியிருக்கிறார்.

தமிழில் வரலாற்றுப் புதினம் எழுதுவதற்குத் தேவையான வழிமுறைகள் கிடைக்காததால், கல்கி தனக்கு முன்மாதிரியாக வோல்ட்டர் ஸ்காட், அலெக்ஸாண்டர் டூமாஸ் போன்ற பிறநாட்டுக் கதாசிரியர்களை எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. மிகுந்த ஆராய்ச்சியும் தேடலும் செய்து, கிடைத்த சரித்திர ஆவணங்களைக் கொண்டு, சரித்திரப் புழுப் பற்ற நாயக, நாயகியருக்கு உயிர் கொடுத்து, கற்பனை பாத்திரங்களையும் நிகழ்வுகளையும் இடையிடையே கோர்த்து, தமிழுக்கு முதல் சரித்திரப் புதினத்தைத் தந்த பெருமை கல்கியையே சாரும்.

அவருக்குப் பிறகு சாண்டில்யன், கோவி.மணிசேகரன் போன்ற எத்தனையோ கதாசிரியர்கள் வரலாற்றுப் புதினங்களை எழுதினார்கள். சிவசங்கரி, இந்துமதி, ஜெயகாந்தன், சுஜாதா போன்றவர்கள் சமூகப் புதினங்களையே எழுதினார்கள். முள்ளும் மலரும், சிறை போன்ற சில சமூகப் புதினங்கள் மட்டுமே தமிழில் திரைப்படங்களாக வந்தன.

சுஜாதாவின் ப்ரியா திரைப்படமாக வந்தபோது மூலக்கதை காணாமலே போய், கேலிக்கூத்தாகியது. முள்ளும் மலரும், சிறை போன்றவை வெற்றிப் படங்களாக அமைந்தன. புகழ் பெற்ற ஆங்கில எழுத்தாளர் ஜேன் ஆஸ்டின் எழுதிய 'சென்ஸ் அண்ட் சென்சிபிலிட்டி' என்ற மிக அற்புதமான சமூகப் புதினம், மூலக்கதை கொஞ்சம், தமிழ்ச் சூழலுக்கேற்ப, கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன் என்ற படமாக வெளிவந்து வெற்றிப் படமாக அமைந்தது. இப்படித்தில், புதினங்களிலிருந்து திரைக்கு வந்த ஆங்கிலத் திரைப்படங்களுக்கும் தமிழ்த் திரைப்படங்களுக்கும் ஒரு சிறு ஒப்பீடு செய்து பார்க்க வேண்டியது அவசியமாகிறது.

ஜேன் எஸ்டின் எழுதிய ஆறு புதினங்களும் பி.பி.சி. நிறுவனத்தால் திரைப்படங்களாகவும் தொலைக்காட்சிப் படங்களாகவும் எடுக்கப்பட்டன. வசனங்கள் அப்படியே பயன்படுத்தப்பட்டிருந்தன. அக்காலகட்டத்தின் வீடுகள், தெருக்கள், கடைகள், உடைகள் எல்லாவற்றையும் தொழில்நுட்பத்தின் உதவியோடு கொண்டுவர முடிந்தது.

அவற்றில் நடித்தவர்கள் அந்தந்தக் கதாபாத்திரங்களாகவே வாழ்ந்தார்கள். பேச்சு, வசன உச்சரிப்பு, முகபாவம், உடல்மொழி, பாடல்கள் எல்லாமே புதினங்களை ஒட்டியே இருந்ததால், இன்றும் கூட அத்திரைப்படங்களைப் பார்க்கும்போது மனதில் இன்பம் பொங்குகிறது. தோமஸ் ஹார்டி, சார்ல்ஸ் டிக்கன்ஸ் போன்ற பழம்பெரும் ஆங்கில எழுத்தாளர்கள் எழுதிய 'கிளாசிக்ஸ்' எனப்படும் பல புதினங்கள் மூலக்கதை சிதையாமல் அப்படியே திரைப்படங்களாக வெளிவந்து வெற்றி பெற்றிருக்கின்றன.

ஜே.கே.ரெய்லிங் எழுதிய 'ஹரி பொட்டர்' புதினம் மிகவும் சிக்கலான கதை. ஏழு புத்தகங்களாக இருக்கும் இக்கதையை எட்டு படங்களாக எடுத்தார்கள். கதை சிறிதும் மாறாமல் இருப்பதாலும் உரையாடல்களை அப்படியே பயன்படுத்தியிருப்பதாலும் திரைபடத்தைப் பார்க்கும்போது புத்தகத்தைப் படிக்கும் உணர்வே ஏற்படுகிறது. தொழில்நுட்பரும் பிரம்மாண்டமும் கிராபிக்ஸுமும் கதையைக் கொன்றுவிடவில்லை. படத்தின் இயக்குனர் எங்கும் தெரியவில்லை. அதுவே அப்படத்தின் வெற்றிக்குக் காரணம்.

தமிழில் புதினம் திரைப்படமான சமீபத்திய நிகழ்வு, பொன்னியின் செல்வன். மிகச் சிக்கலான இக்கதையைக் கல்கி எளிய நடையில் எழுதியிருப்பார். ஆனால், திரைப்படத்திலோ கதையையே காணோம். எல்லா கதாபாத்திரங்களும் எப்போதும் கோபமாகவே பேசுகிறார்கள். ஏதோ முதுகுத் தண்டுவட பாதிப்பினால் அவஸ்தைப்படுபவர்கள் போல் தலையைத் திருப்பாமல் கையை ஆட்டாமல் ஒரே தொனியில் வசனம் பேசுகிறார்கள். ஆண் கதாபாத்திரங்கள் எல்லோரும் மொகலாய அரசர்கள் போல் தாடியுடனே இருக்கிறார்கள்.

வானதி கொடும்பாளூரின் இளவரசி. பின்னாளில் ராஜராஜனை மணந்து திரிபுவனமாதேவி என்ற பெயர்கொண்டு ராஜேந்திர சோழனைப் பெற்றெடுக்கிறாள் என்று சரித்திர ஆராய்ச்சியாளர் சதாசிவ பண்டாரத்தார், 'பிற்காலச் சோழர் சரித்திரம்' என்ற நூலில் குறிப்பிடுகிறார். கல்கியால் பயங்கொள்ளியாகவும் சங்கோஜியாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கும் வானதியை, ஒரு அரசிளங்குமியை, அதிலும் குந்தவையின் உயிருக்குயிரான தோழியை, ''இராட்சஸ மாமனே...'' என்று கூத்தாகுளுடன் ஆடவிட்டிருப்பதை என்னவென்று சொல்வது?

வரலாற்றுப் பதிவுகளின்படியும் கதையின்படியும் ஆதித்த கரிகாலன் பெரும் வீரன். அப்படிப்பட்டவனை, அதிலும் பட்டத்து இளவரசனை, படைவீரர்களோடு குடித்துவிட்டுக் கூத்தாடுவதாகக் காட்டியிருக்க வேண்டாம். பாடல்களும் ஆடல்களும் வரலாற்றுப் படத்துக்குச் சற்றும் பொருந்தவில்லை.

அரசிகளின் ஆடைகளும் ஆபரணங்கள் கூடத் தமிழ் கலாசாரத்தோடு பொருந்தவில்லை. ராஜபுத்திர ராணிகள் அலங்காரம் போலவே உள்ளன. படம் நெடுகிலும் இயக்குனர் தெரிகிறார். கல்கியும் கதையும்தான் காணாமல் போய்விட்டார்கள்.

நன்றி - தினமணி

தவக்கால சிந்தனை

கண்களின் வார்த்தைகள்

"அப்பா, வானகத்திற்கு எதிராகவும் உமக்கு முன்பாகவும் குற்றம் செய்தேன். இனிமேல் உம்முடைய மகன் என்று எண்ணப்பட தகுதியற்றவன்" என்று ஊதாரி மகன் கூறிய சொற்கள் நமக்கு நினைவுக்கு வருகின்றன. இங்கு இன்னொன்றையும் கவனிப்போம். இயேசு இதற்கு முன்பும் சீமோனை உற்று பார்த்ததை அருளப்பர் கூறுவார். "இயேசு அவரை உற்றுநோக்கி நீ அருளப்பனின் மகனாகிய சீமோன் கேபா எனப்படுவாய்" என்றார். (கேபா என்பதற்கு பேதுரு பாறை என்பது பொருள்) இயேசு முதன்முறையாக உற்றுநோக்கியபோது பாறையானார். இயேசு இரண்டாவதாக உற்றுநோக்கியபோது பவளப்பாறையானார். இயேசுவின் கண்களின் வார்த்தைகளை பேதுரு புரிந்து கொண்டு கண்ணீரால் பதில் கூறினார். பாறையை மோயீசன் தட்டியவுடன் தண்ணீர் வந்தது. இயேசுவின் பார்வைபட்டும் கண்ணீர் வந்தது. பேதுரு தன் விதியானது தன்னை எங்கே கொண்டு சேர்க்கப்போகிறது என்பதைக் கூட அறியாதவராக இருக்கின்றார். அதன் வழியில் இழுத்த இழப்பில் போக வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றார். இயேசு முன்கூட்டியே மறுதலிப்பாய் என்று அறிவித்திருந்தும், அவரால் எச்சரிக்கையாக இருக்க முடியவில்லை - விழுந்தார் எழுந்தார். மனிதன் ஆசாபாசங்களால் எப்போதும் கட்டுண்டவன். அதனால் தன் சீலத்தை இழந்தவன் - இயேசுவின் அன்பால் பாவங்களை சுழுவி தன் பழைய பிரகாசத்தை எந்த ஜீவனும் அடைய முடியும் என்பது புரிகின்றது. நற்செய்தியில் இது மிகச்சிறியதாக பேசப்படுகிறது. ஆனாலும் இதுதான் நற்செய்தியின் மையப்பகுதி. இந்த நிகழ்ச்சியின் வழியாக நாம் கற்கவேண்டிய பாடங்கள் ஏராளம்.

இன்றைய நாளில்...

* 1876 – அலெக்சாண்டர் கிரஹம்பெல் தொலைபேசிக்கான காப்புரிமம் பெற்றார்.
* 1971 – கிழக்குப் பாகிஸ்தான் அரசியல் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் டாக்காவில் நிகழ்த்திய தனது வரலாற்றுப் புகழ் மிக்க உரையில், "இம்முறை போராட்டம் நமது விடுதலைக்கானது" என அறிவித்தார்.
* 1996 – பலஸ்தீனத்தில் முதலாவது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றம் அமைக்கப்பட்டது.

நக்கல் நமசிவாயம்

போராட்டத்தால ஆட்சியை மாத்த முடியாதெண்டு சொல்லுறார் ரணில் ஐயா... ஆனா, போராட்டத்தால் ஜனாதிபதி பதவிய மாத்தலாம் பாருங்கோ..!

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் பாலைதீவுக்கு விஜயம்

பூநகரி, பள்ளிக்குடா பிரதேசத்தைச் சேர்ந்த பாலைதீவு பகுதியில் நீர்வேளாண்மை உற்பத்திகளுக்குப் பொருத்தமான இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில், குறித்த பகுதிக்கான கள விஜயத்தை அதிகாரிகள் சகிதம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் (05) மேற்கொண்டார்.

குறித்த விஜயத்தின்போது, பாலைதீவு அந்தோனியார் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆலயத்தின் செயற்பாடுகள் மற்றும் மார்ச் 08ஆம் திகதி பாலைதீவு அந்தோனியார் ஆலயத்தில் ஆரம்பமாகவுள்ள கொடியேற்றத் திருவிழா ஏற்பாடுகள் தொடர்பாக நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார்.

மேலும் ஆலய புனரமைப்புப் பணிகளுக்கு நிதியுதவி வழங்கவும் உறுதியளித்துள்ளார்.

நீர்வேளாண்மை உற்பத்திகளான கடலட்டை மற்றும் கடற்பாசி வளர்ப்பு போன்றவற்றை பாலைதீவை அண்டிய பகுதிகளில் ஆய்வு ரீதியாக அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில், தனியார் முதலீட்டாளர்களின் ஒத்துழைப்புடனும், பாலைதீவை அண்மித்த பிரதேச மக்களின் பங்களிப்புடனும் மேற்கொள்வது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடினார்.

மேலும், கடற்றொழிலாளர்களுக்கு மேலதிக வாழ்வாதாரத்தை வழங்கக்கூடிய, குறித்த உற்பத்திகளை மேற்கொள்கின்ற தரப்புகள், கிடைக்கும் வருமானத்தின் ஒரு பகுதியை பிரதேசத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதுடன், பாலைதீவு அந்தோனியார் ஆலய புனரமைப்பு மற்றும் திருவிழா கால செலவீனங்களுக்கும் பங்களிப்பு செய்ய வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாட்டை மீளக் கட்டியெழுப்ப ஒத்துழைப்பை நல்குமாறு நியூசிலாந்து உயர்ஸ்தானிகரிடம் சஜித் கோரிக்கை

இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் அப்பிள்டனுக்கும் (Michael Appleton) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (06) இடம்பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான ஒத்துழைப்பை நல்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் நியூசிலாந்து உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்தார்.

இலங்கையில் வறுமையை ஒழிக்க நியூசிலாந்து அரசாங்கத்தின் ஆதரவை கோரிய எதிர்கட்சித் தலைவர், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையின் முக்கியத்துவம் குறித்தும் சுட்டிக் காட்டினார்.

இந்நாட்டு அரசியலில் தனித்துவ அடையாளத்தைப் பதித்து எதிர்க்கட்சியின் அரசியல் கட்சி என்ற வகையில் பிரபஞ்சம் மற்றும் மூச்சு வேலைத்திட்டங்கள் மூலம் நாட்டுக்கு பெறுமதி சேர்த்ததை எதிர்க்கட்சித் தலைவரால் நினைவுகூரப்பட்டதோடு, நியூசிலாந்து உயர்ஸ்தானிகரின் பாராட்டும் கிடைக்கப்பெற்றது.

சமூகநல கொடுப்பனவுகளைப் பெற போலி தகவல் வழங்குவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

சமூக நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்காக போலியான தகவல்களை வழங்குவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான இயலுமை காணப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 37 இலட்சம் விண்ணப்பங்களில் 02 இலட்சம் விண்ணப்பங்கள் இதுவரை பரிசீலிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பரிசீலனை நடவடிக்கைகளுக்காக வருகை தரும் அதிகாரிகளுக்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குமாறும் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த மாத இறுதிக்குள் விண்ணப்பங்கள் தொடர்பான பரிசீலனைகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதற்கு வட்டுக்கோட்டை மேற்கு மக்கள் எதிர்ப்பு!

பிரதேச செயலருக்கு கடிதம்



வட்டு. மேற்கு பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றின் தொலைத்தொடர்பு கோபுரத்தை அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வலி. மேற்கு பிரதேச சபையின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தின் பிரதியை விமானப்படை, பாதுகாப்பு அமைச்சு, சுற்றாடல் அதிகாரசபை, UDA, MOH, வட மாகாண ஆளுநர், உள்ளூராட்சி மன்ற உதவி ஆணைய ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது,

வட்டு. மேற்கு பகுதியில் வசிக்கும் மக்களாகிய நாங்கள் அறியத் தருவது யாதெனில், வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை கிராமத்தில், மூளாய் 4ஆம் ஒழுங்கையில் தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதற்கு டயலொக் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரதேச சபையிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, பிரதேச சபையினால் அனுமதி வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது. டயலொக் நிறுவனத்தால் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இக்கிராம பொது அமைப்புகளிடமும் அனுமதி / சம்மதக் கடிதம் பெறப்பட்டதாக பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

ஆனால், இக்கோபுரம் அமைக்கும் இடத்திற்கும், சம்மதக் கடிதம் வழங்கிய அமைப்புகளுக்கு மிடையில் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. தொலைத்தொடர்பு கோபுரத்தை அமைப்பதற்கு காணியை வழங்கிய நபர் இப் பிரதேசத்தில் இல்லை, இக் காணியின் உரிமையாளர் தன்னுடைய காணியில் இரண்டாவது கோபுரம் அமைப்பதற்கு வழங்கியுள்ளார். இரண்டு பிரதேசங்களில் அமைப்பதற்கு காணியை வழங்கியுள்ளார்.

அத்துடன், கோபுரம் அமைப்பது அயல் வீட்டாருக்கு கூட தெரியாத வகையில் பணிகள் முடக்கி விடப்பட்டிருந்தன. இத்தொலைத்தொடர்பு கோபுரம் இப் பிரதேச குடியிருப்புப் பகுதியினுள் அமையவிருப்பதால் மக்கள் உடலியல் ரீதியான பாதிப்புகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படலாம்.

எனவே, இந்தக் கோபுரத்தை அமைப்பதற்கு இப்பிரதேச மக்கள் எதிர்ப்பை வெளியிடுவதுடன், இதனை அமைப்பதை உடனடியாக இடை நிறுத்துமாறு வேண்டுகின்றோம் - என்றுள்ளது.

மரை இறைச்சியுடன் ஒருவர் கைது!

சட்டவிரோதமாக மரை இறைச்சியை எடுத்து வந்தவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் நேற்று முன்தினம் (05) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் 3 கிலோ மரை இறைச்சியை கிளிநொச்சியிலிருந்து எடுத்து வந்தவேளை ஊர்காவற்றுறை பகுதியில் வைத்து இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் ஊர்காவற்றுறை பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவராவார். அவரை இன்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்வதற்கு நீதிவான் உத்தரவிட்டார்.

புஸல்லாவையில் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டு சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் கணவர் கைது

புஸல்லாவை பகுதியில் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்ட பெண்ணின் கணவர் விஜேராம இறப்பர் வத்த பகுதியில் தலைமறைவாகியிருந்த நிலையில், நேற்று (06) அதிகாலை மிரிஹான பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் கொலைசெய்யப்பட்ட பெண்ணின் இரண்டாவது கணவர் என்பதுடன், கணினிப் பொறியியலாளராவார்.

கொலை செய்யப்பட்ட பெண்ணை கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் திருமணம் செய்துகொண்டதுடன், களுபோவில பகுதியில் இருவரும் வசித்து வந்ததாக தெரியவந்துள்ளது.

சம்பவதினம் எல்பொட கட்டுகித்துலையில் உள்ள பெண்ணின் தாய்வீட்டுக்கு செல்வதற்காக கொழும்பிலிருந்து இருவரும் புஸல்லாவைக்கு வந்தபோது, உயிரிழந்த பெண்ணின் கணவரான சந்தேக நபர் அவரிடமிருந்து விவாகரத்து தருமாறு கேட்டுள்ளார். இதனையடுத்து இருவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் கைதான நபரிடம் மேற்கொண்ட முதலாம் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தாலிக் கயிற்றினால் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் நிரஞ்சலா என்ற 25 வயது இளம் பெண்ணொருவரின் சடலத்தை கடந்த சனிக்கிழமை புஸல்லாவை பொலிஸார் மீட்டிருந்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை புஸல்லாவை பொலிஸார் மேற்கொண்டிருந்த நிலையில், குறித்த பெண்ணின் கணவர் தலைமறைவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு-14, ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் இளைஞர் சபை ஏற்பாட்டில் இரண்டாவது முறையாக ஏற்பாடுசெய்யப்பட்ட சினேகா கிரிக்கெட் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் இந்து இளைஞர் சபை 'பி' பிரிவு வெற்றிபெற்றது. பிரதம அதிதியாக கலந்துகொண்ட கிராண்ட்பாஸ் பொலிஸ் பொறுப்பதிகாரி ஹர்சன், வெற்றியீட்டிய அணிக்கு வெற்றிக்கிண்ணத்தை வழங்கினார். (படங்கள். மொஹமட் நசார்)

வழக்குப் பதிவுசெய்யப்பட்ட மோட்டார்சைக்கிள் திருட்டு

எம்பிலிபிட்டிய நீதவான் நீதிமன்றில் வழக்குப் பதிவுசெய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளதாக எம்பிலிபிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எம்பிலிபிட்டிய நீதவான் நீதிமன்ற பதிவாளர் எம்பிலிபிட்டிய தலைமையகப் பொலிஸாரிடம் நேற்று முன்தினம் (05) இதனை அறிவித்தார்.

மோட்டார்சைக்கிள் எப்போது திருடப்பட்டது என்று தெரியவில்லையெனவும் பதிவாளர் செய்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக எம்பிலிபிட்டிய பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வழக்குப் பொருளான மோட்டார் சைக்கிளை திருடிச்சென்றவர்கள் குறித்த தகவல் இதுவரை பொலிஸாருக்குக் கிடைக்கவில்லை. மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உடப்பு ஆண்டிமுனை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மாசி மக உற்சவத்தில் நேற்று (6) தீர்த்தோற்சவம் உடப்பு பாலத்தருகிலுள்ள இந்து சமுத்திரத்தில் இடம்பெற்றது. இதன்போது பக்தர்கள் பலர் தீர்த்தத்தில் கலந்துகொண்டு அம்மனின் அருளைப் பெற்றுக்கொண்டனர். (உடப்பு செய்தியாளர்)

ஞாயிற்றுக்கிழமை 2023.03.05 உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

ஸ்ரீ லங்கா தேசிய பொத்தர் சபை National Lotteries Board

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5050 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 6 5 0 9 9 9

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3292 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,097,661.20
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 18 40 50 71

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1505 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,229,705.60
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 5 3 2 2 7 7

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1080 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,000,000.00
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 10 35 45 49

ராசி சுப பலன் — சீட்டிழுப்பு இலக்கம் 359 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,994,903.80
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 11 13 27 36 — விசேட இலக்கினம் தனுசு

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1398 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 305,925,826.00
ஆங்கில எழுத்து C — சுப்பர் இலக்கம் 14 — வெற்றி இலக்கங்கள் 32 58 60 65
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

செலான் வங்கி பீ.எல்.சி.

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

செலான் வங்கி (பீ.எல்.சி.) - பொத்துவில் கிளை
பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை

பொத்துவில் - 11இல் வசிக்கும் தீபால் நிரோஸ் சதாநந்த வேறுபெயர் தீபால் நிரோஷ் சதானன்த என்பவர் "கடப்பாடுடையவர் / ஈடுவைத்தவர்" என்ற வகையில் தவணை தவறியுள்ளதால், பிரசித்த நொத்தாரிசு ஆ.மு.பெரிநாபராஜா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனைத்துமான 2013.03.13ஆம் திகதியிடப்பட்ட 1742ஆம் இலக்க ஈட்டுமுறி, 2013.09.18 ஆம் திகதியிடப்பட்ட 2051ஆம் இலக்க ஈட்டுமுறி, 2015.06.26ஆம் திகதியிடப்பட்ட 2865ஆம் இலக்க ஈட்டுமுறி, 2015.09.15 ஆம் திகதியிடப்பட்ட 2914 ஆம் இலக்க ஈட்டுமுறி, 2016.06.28 ஆம் திகதியிடப்பட்ட 3115 ஆம் இலக்க ஈட்டுமுறி ஆகியவை மூலம் செலான் வங்கி பீஎல்சீயில் அடகுவைக்கப்பட்ட வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால், இங்கு கீழே அட்டவனையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் அதன் சுற்றுச்சூழலானது,

2023 ஏப்ரல் 03ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு செலான் வங்கி பீ.எல்.சியினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி இல. 90, காலி வீதி,கொழும்பு 03இல் உள்ள கிளை வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

இந்த ஏலவிற்பனையானது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கொவிட் 19 நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டுதலுக்கேற்ப நடத்தப்படும்.

அட்டவணை

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில், பொத்துவில் பாணமபத்து பிரதேச செயலாளர் அலுவலக பிரிவிற்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள் பி / 03 கிராம சேவகர் பிரிவிற்குள், பொத்துவில் 03இல் உள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் சீ.ஈ.பிலிப்ஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1952,09.15ஆம் திகதி 805ஆம் இலக்க அளவீட்டுத் திட்டத்தின்படி "பாக்கியவன்ன அல்லது மவுலானா தோட்டம்" என அழைக்கப்படும் விசாலமான காணியின் அளவானது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி 104 அடி கிழக்கிலிருந்து மேற்காக 52 அடி (வ-தெ 104 அடி, கி-மே 52 அடி) விசாலமான காணித் துண்டு.

உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.எம்.காசிம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.07.01ஆம் திகதி 5630 ஆம் இலக்க அளவீட்டுத் திட்டத்தின்படி.

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில், பொத்துவில் பாணமபத்து பிரதேச செயலாளர் அலுவலக பிரிவிற்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள் பி / 03 கிராம சேவகர் பிரிவிற்குள், பொத்துவில் 03இல் "பாக்கியவன்ன அல்லது மவுலானா தோட்டம்" என துழைக்கப்படும் விசாலமான காணியின் அளவானது இருபத்து மூன்று தசம் ஒன்று ஒன்று பேர்ச்சஸ் (பே 23.11) (0.0585 ஹெக்டேயர்) விசாலமான காணித் துண்டு.

காணிக்குப் பிரவேசிக்கும் வழி :- வங்கி வளாகத்தில் இருந்து அக்கரைப்பற்றுவை. நோக்கி 200 மீற்றர் தூரத்தில் இடது பக்கம் உள்ள வட்டிவெலி வீதி வரை சென்று பிறகு அந்த வட்டிவெலி வீதியில் 300. மீற்றர் சென்ற பிறகு இவ் விடயத்திற்கான காணி இடது பக்கம் அமைந்துள்ளது.

தீர்மான முடிவு அறிவித்தல்கள்: 2022.06.17 ஆம் திகதிய இலங்கைச் ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2022.06.29 ஆம் திகதி டெய்லி FT, அத மற்றும் தமிழன் ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கட்டணங்கள் செலுத்தும் விதம் - உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10%
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2500/-
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம்,
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

கொள்முதல் விலையின் 90% வீதத்தையும் மிகுதி, இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகாரசபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு. உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும். பிரதான முகாமையாளர், (சட்டம்), செலான் வங்கி பீ.எல்.சி., இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி இலக்கங்கள்; 011-2456494, 011-2456479

மேற்படி ஏலவிற்பனையை எதுவித முன்னறிவித்தலும் இன்றி இடைநிறுத்துவதற்கு / இரத்துச் செய்வதற்கு வங்கிக்கு அதிகாரமுண்டு.

சந்திமா பிரியதர்ஷனீ கமகே,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர் மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-I ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்த, பளாகொட, ஹோமாகம.
தொலைபேசி இலக்கம்: 071 4318252

கொட்டகலை நகர்ப் பகுதியில் பாரிய தீ விபத்து; தளபாடக் கடைத்தொகுதியும் – வீடும் தீக்கிரை

ரூ.3 கோடி பெறுமதியான பொருட்கள் நாசம்

(அந்துவன் - தலவாக்கலை, நோட்டன் பிரிட்ஜ் நிருபர்கள்)

கொட்டகலை நகரப் பகுதியில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் தளபாடக் கடைத்தொகுதியும், வீடும் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீ விபத்து நேற்று முன்தினம் (05) இரவு 09.30 மணியளவில் ஏற்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை லூட்கன் பசார் பகுதியில் வீதிக்கு அருகாமையிலுள்ள ஒரே கட்டடத்தில் அமையப்பெற்றுள்ள தளபாடக் கடை மற்றும் வீடு ஆகியன முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன.

திம்புள்ள பத்தனை பொலிஸார் மற்றும் பிரதேச பொதுமக்கள், நுவரெலியா மாநகர சபையினரின் தீயணைப்புப் பிரிவினர், கொட்டகலை இராணுவத்தினர், இராணுவத்தின் தீயணைப்புப் பிரிவினர் ஆகியோர் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததுடன், சுமார் 4 மணித்தியாலயங்களுக்குப் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. எனினும், பொருட்கள் மற்றும் ஆவணங்கள் என அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன.

தீயணைப்புப் படையினர் விரைந்து வந்திருந்தால் இந்தப் பாரிய அனர்த்தத்தை கட்டுப்படுத்திருக்கலாம் என கூறப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு அண்மித்த பகுதியில் கொட்டகலை பிரதேச சபையில், தீயணைப்பு வாகனம் இல்லை என்பதால், கொட்டகலை பிரதேச சபை தலைவர் ராஜமணி பிரசாத் உடனடியாக நுவரெலியா மாநகர சபையினரின் தீயணைப்புப் பிரிவினரை வரவழைத்து தீயைக் கட்டுப்படுத்துக்குள் கொண்டு வந்தார் என பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

தீக்கிரையாகிய இவை அனைத்தும் ஒரே உரிமையாளருக்கு சொந்தமானதாகவும், சம்பவம் இடம்பெற்ற வேளை உரிமையாளர் மற்றும் அவரின் மனைவி ஆகியோரே இருந்துள்ளதாகவும் எனினும், அவர்களை எந்தவித காயங்களும் ஏற்படாமல் காப்பாற்றி யுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

தீயால் சுமார் 3 கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து சேதமாகியுள்ளன. தீ ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், திம்புள்ள பத்தனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவம் இடம்பெற்றபோது, அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பணிப்புரைக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஸ்வரன் உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்ததோடு, இவ்வாறான சம்பவங்கள் இனிமேலாவது இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என கொட்டகலை பிரதேச சபைக்கு பணிப்புரை விடுத்தார்.

தீயணைப்பு வசதி இருந்திருப்பின் பேரிழப்பைத் தடுத்திருக்கலாம்

உரிய பிரதேச சபை பொறுப்புக் கூற வேண்டும் என்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் திகாம்பரம்

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

கொட்டகலை நகரத்தில் இடம்பெற்ற தீ விபத்துக்கு உரிய பிரதேச சபையும் பொறுப்பு கூற வேண்டும் என முன்னாள் அமைச்சரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொட்டகலையில் இடம்பெற்ற தீ விபத்திற்கு எனது கவலையைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த சம்பவ இழப்பீட்டுக்கு குறித்த பிரதேசத்துக்கு பொறுப்பான பிரதேச சபையும் பொறுப்புக் கூற வேண்டும்.

தீயணைப்புப் படைகள் நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா மாநகர சபையிலும், ஹட்டன் நகர சபையிலுமே காணப்படுகின்றன. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளடங்கலாக 12 உள்ளூராட்சி மன்றங்கள் இருந்தும் இரண்டில் மாத்திரம் இந்தத் தீயணைப்பு வசதி காணப்படுவது அசாதாரணமானது. குறித்த சபைகளுக்கு தலைமைதேற்கும் தலைவர்கள் இவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்துவதில்லை.

இடங்களை கையப்படுத்துவதிலும் சுய வருமானமீட்டலிலும் அக்கறை செலுத்தும் தலைவர்கள் ஏன் இவ்விடயத்தில் அக்கறை செலுத்துவதில்லை? கடந்த 5 வருட சபை ஆட்சி காலத்தில் இதனைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இவ்வாறான வசதிகளை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு இத்தகைய சேவையை வழங்குவதே சபைகளின் பொறுப்பு.

இச்சம்பவத்தில் கொட்டகலை பிரதேச சபையில் தீயணைப்புப் படை வசதி இருந்திருப்பின் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்து பெரும் இழப்பைத் தடுத்திருக்க முடியும்.

எனவே, எதிர்வரும் காலங்களிலாவது வரும் சபைத் தலைவர்கள் இத்தகைய ஆக்கப்பூர்வமான பணிகளை முன்னெடுக்க வேண்டும் - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற வளவில் வழக்கு தடயப்பொருளாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மாயம்

(ஏ.ஏ.எம்.பாயில்)

வழக்கு ஒன்றின் தடயப்பொருளாக எம்பிலிப்பிட்டிய நீதிமன்ற வளவில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று களவாடப்பட்டுள்ளது.

இவ்வியமாக எம்பிலிப்பிட்டிய நீதிமன்றப் பதிவாளர் எம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். மேற்படி மோட்டார் சைக்கிள் வழக்கு ஒன்றின் தடயப்பொருள் எனவும் நீதிமன்றத்தில் அடையாளப்படுத்துவதற்காக அவ்விடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும் இந்த மோட்டார் சைக்கிள் காணாமல்போன திகதி அல்லது காலப்பகுதி குறித்து சரியாகக் குறிப்பிட முடியாது எனவும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

காணாமல்போன மோட்டார் சைக்கிள் குறித்து தகவல் எதுவும் பொலிஸாருக்குப் கிடைக்கவில்லை எனவும் நீதிமன்ற பதிவாளரின் முறைப்பாட்டையடுத்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மக்களை ஏமாற்றும் வேலையை அரசும் தேர்தல் திணைக்களமும் செய்யக் கூடாது

செல்வம் எம்.பி.தெரிவிப்பு

(வவுனியா நிருபர்)

அரசாங்கமும் தேர்தல் திணைக்களமும் தொடர்ச்சியாக மக்களை ஏமாற்றும் வேலையை செய்யக் கூடாதென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிலுள்ள ரெலோ கட்சியின் அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை (04) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உச்ச நீதிமன்றம் தேர்தல் தொடர்பான தனது தீர்ப்பை வழங்கியுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை விடுவிக்குமாறும் தேர்தல் நடத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால், தேர்தல் இல்லை

என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். தேர்தல் திணைக்களம் தேர்தலை நடத்துவதாக கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்றது. வேட்பாளர்கள் சக்கரத்தை கட்டிக்கொண்டு ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் தேர்தல் நடக்குமா, இல்லையா என்ற சிந்தனையே உள்ளது.

ஆகவே, தேர்தல் திணைக்களம் தேர்தலை வைப்பதாயின் உடனடியாக தனது நிலைப்பாட்டை சொல்ல வேண்டும். தற்போது 9ஆம் திகதி தனது கருத்தை சொல்வதாக தேர்தல் திணைக்களம் கூறுகிறது. நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது என்பது தெரியாமல் இருக்கின்றது. தேர்தல் வருமா, வராதா என கட்சிகளும் வேட்பாளர்களும் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ச்சியாக மக்களை ஏமாற்றும் வேலையை அரசாங்கமும் தேர்தல் திணைக்களமும் செய்யக் கூடாது. ஆகவே, இறுதி முடிவை 9ஆம் திகதியாவது அறிவிக்க வேண்டும் – என்றார்.

அச்சுவேலியில் இளைஞர் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

(யாழ். நிருபர்)

யாழ். அச்சுவேலி - மகிடிடி வைரவர் கோயில் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இளைஞர் ஒருவர் மீது வாள்வெட்டுக் குழு ஒன்று துரத்தித் துரத்தி வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளது. இச்சம்பவம் குறித்து அச்சுவேலி பொலிஸார் தகவல் தருகையில்,

இரு குழுக்களுக்கிடையில் தொடர்ச்சியாக முறுகல் நிலை இருந்து வந்துள்ளது. இந்நிலையில், ஒரு குழுவைச் சேர்ந்த இளைஞன் அச்சுவேலி நகருக்கு வந்திருந்த நிலையில், மற்றைய குழுவைச் சேர்ந்தவர்கள் அவனை துரத்தித் துரத்தி வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் பாரதி வீதி பத்தமேனியைச் சேர்ந்த 27 வயதான இளைஞன் ஒருவனே வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில், அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தினால் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு கடந்த வெள்ளிக்கிழமை (03) ஒரு தொகுதி சத்திகரிப்பு உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. முன்னாள் ரோட்டரியன் கௌரிராஜனின் நிதிப்பங்களிப்பில் குறித்த உதவித்திட்டம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சாவகச்சேரி நிருபர்)

மின்சாரம் தாக்கி இளைஞன் உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

தெல்லிப்பழை -கட்டுவன்புலம் பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த எஸ்.மாதவன் (வயது 18) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கட்டுவன்புலம் பகுதியில் வேப்ப மரத்தின் கொப்புகளை வெட்டும்போது பிரதான அதி உயர் மின்கம்பியில் கொப்பு தொடுகையில் மின்சாரம் தாக்கி இவர் உயிரிழந்துள்ளார்.

சீனிப்பாணியைக் காய்ச்சி தேன் என விற்பனை செய்தவர் வவுனியாவில் கைது

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் சீனிப்பாணியைக் காய்ச்சி தேன் என விற்பனை செய்த நபரை சுகாதாரப் பிரிவினர் சுற்றிவளைத்ததுடன், அவரிடமிருந்து 41 லீற்றர் சீனிப்பாணியையும் கைப்பற்றியுள்ளனர்.

தேன் என சீனிப்பாணியை விற்பனை செய்கின்றமை தொடர்பில் வவுனியா சுகாதாரப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பாணியை சுகாதாரப் பிரிவினர் கைப்பற்றியதுடன், சீனிப்பாணி காய்ச்சப் பயன்படுத்தப்பட்ட பொருட்களையும் கைப்பற்றினர்.

சந்தேகநபர் நெளுக்குளம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டதுடன், சந்தேகநபர் மற்றும் கைப்பற்றப்பட்ட 55 போத்தல்களில் அடைக்கப்பட்ட 41 லீற்றர் சீனிப்பாணி, பொருட்கள் என்பன வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 10ஆம் திகதிவரை சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

சீனிப்பாணியை தேன் என ஏ-9 வீதிகளில் தினசரி விற்பனை செய்வதுடன், யோகட் தயாரிக்கும் நிறுவனங்களுக்கும் விழங்குவது சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

யாழில் நகைகளைத் திருடியவர்கள் கைது

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்திலுள்ள ஆலயங்களில் நகைத் திருட்டில் ஈடுபட்டுவந்த கும்பல் ஒன்றை இளவாலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, நுணசை சிவன் கோவிலில் நேற்று முன்தினம் (05) நடந்த உற்சவத்தில் தங்கச்சங்கிலி ஒன்று அறுக்கப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டியில் வந்த வெளி மாவட்டத்தைச் சேர்ந்த மூவர் அடங்கிய கும்பலால் இந்தத் திருட்டு மேற்கொள்ளப்பட்டபோது ஓர் ஆணும் ஒரு பெண்ணும் கைதுசெய்யப்பட்ட நிலையில், மற்றுமொரு பெண் தலைமறைவாகியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆலயங்களில் அண்மைக்காலமாக இடம்பெற்ற பல்வேறுபட்ட நகைத் திருட்டுகளுடன் குறித்த கும்பலுக்கு தொடர்புள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த கும்பலால் சுமார் ஒன்பது இலட்சரூபா பெறுமதியான ஐந்தரை பவுண் நகைகளவாடப்பட்ட நிலையில், ஒருதொகை திருடப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்திய மீனவர்களுக்கு கரையோரப் பாதுகாப்புப் படை பயிற்சியளிப்பது அச்சத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது

யாழ். மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத் தலைவர் முரளிதரன்

(வட்டுக்கோட்டை நிருபர்)

இந்தியாவில் 824 பேருக்கு கரையோரப் பாதுகாப்புப் படை என்று கூறி அண்மையில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பாக முத்துப்பாண்டி என்ற ஒருவர் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளார். மிகுதிப்பேர் மாநிலப் படையில் இணைய வுள்ளதாக தகவல் கிடைத்திருப்பதாக யாழ். மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத் தலைவரும், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மகா சபைத் தலைவருமான இ.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (05) யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராமேஸ்வரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் நாகபட்டினம் ஆகிய மாவட்டங்களிலேயே இவ்வாறு பயிற்சிகள்

வழங்கப்பட்டுள்ளன. குறித்த பயிற்சி இந்தியாவிலிருந்து மஞ்சள், உரங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்துவதை தடுப்பதற்காகத்தான் வழங்கப்பட்டுள்ளது.

உண்மையிலே இந்தப் பயிற்சி வழங்கப்பட்டதென்பது ஒரு விரிவலைதான் உருவாக்கும். இது, இரண்டு நாட்டு தமிழர்களையும் ஒன்றாக இணைவதற்கு இடமளிக்கக்கூடாது என்ற ரீதியில் அரசாங்கம் திட்டமிட்டு செய்யப்படுவதாக எங்களுக்குத் தோன்றுகிறது.

ஆகையால் இந்தப் பயிற்சியை வழங்குவதை உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியாது. இதனால் இன்னமும் பின்னடைவுகள் ஏற்படக்கூடிய சூழ்நிலைதான் உள்ளது.

அங்குள்ள சாதாரண இளைஞர்களுக்கு இந்தப் பயிற்சியை கொடுத்தால் அது எமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், இந்திய மீனவர்களுக்கு இந்தப் பயிற்சியை கொடுப்பதால் அதனை நாங்கள் ஒரு சந்தேகத்தில் பார்க்கவேண்டிய தேவை உள்ளது.

ஏனெனில், அவர்களுக்கு பயிற்சி வழங்கப்படாத காலப்பகுதியிலேயே எமது கடற்கரையிலிருந்து சுமார் இரண்டு அல்லது மூன்று கிலோமீற்றர்கள் தூரத்தில் வந்து செல்கின்றனர். ஆகையால் பயிற்சியும் வழங்கப்பட்டால் அவர்களுடைய பயிற்சி வந்து இன்னமும் விதியாசப்படும்.

அந்தவகையில் இதற்கு இலங்கை அரசாங்கம் என்ன செய்யப்போகிறது. இதனை நாங்கள் இலங்கை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவருகின்றோம். அவர்கள் இதற்கு ஒரு சரியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே எமது கோரிக்கையாக உள்ளது - என்றார்.

மாற்றுத்திறனாளிகளான மகன்கள் இருவரின் சிகிச்சைக்கு பணமின்றி தற்கொலைக்கு முயன்ற தாய்

21 வயதுடைய மகன் உயிரிழப்பு – தாயும் ஒன்பது வயது மகனும் வைத்தியசாலையில்

கெப்பத்திகொல்லாவ, கனுகஹவெவ பிரதேசத்தில் தாய் ஒருவர் தனது இரு அங்கவீனமான மகன்களுடன் நேற்று முன்தினம் (05) கிணற்றில் குதித்து தற்கொலைக்கு முயன்றுள்ளதாக கெப்பத்திகொல்லாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் ஒரு மகன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், தாயுடன் மற்றைய மகன் ஆபத்தான நிலையில், கெப்பத்திகொல்லாவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் கெப்பத்திகொல்லாவ கனுகஹவெவ பிரதேசத்தைச் சேர்ந்த சுனில் சாந்தகே ரேவது மிஹிரங்க என்ற 21 வயதுடைய இளைஞர் என்பதுடன், அவர் முற்றாக ஊனமுற்றவராவார். 48 வயதுடைய தாயும், ஒன்பது வயது மற்றொரு மகனும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட அவரது ஒன்பது வயது காது கேளாதவரென பொலிஸார் தெரிவித்தனர்.

மாற்றுத்திறனாளி குழந்தைகள் இருவருக்கு சிகிச்சையளிக்க பணம் இல்லாத காரணத்தால் குறித்த தாய் இரு குழந்தைகளுடன் கிணற்றில் குதித்து தற்கொலைக்கு முயன்றதாக முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிவில் பாதுகாப்புச் சிப்பாயான இவர்களின் தந்தை நேற்று முன்தினம் (05) அதிகாலை வேலைக்குச் சென்றுவிட்டு காலை 10 மணியளவில் காலை உணவுக்காக வீடு திரும்பியுள்ளார். வீட்டில் மனைவி மற்றும் இரு குழந்தைகளை காணாததால் சுற்றும் முற்றும் பார்த்தபோது, கிணற்றில் மனைவி மற்றும் இரு குழந்தைகளும் கிடப்பதைக் கண்டு, அவர்களை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கெப்பத்திகொல்லாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கைதடியில் செலுத்திப் பார்ப்பதாக தெரிவித்து சந்தேக நபர்கள் இருவரால் வேன் ஒன்று கடத்தல்

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி பகுதியில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் வேன் ஒன்று கடத்திச் செல்லப்பட்டிருப்பதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விற்பனைக்காக நின்ற வேனை செலுத்திப் பார்ப்பதாக உரிமையாளரிடம் தெரிவித்து விட்டு வாகனத்தை கடத்திச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து வேனைப் பார்க்க வருவதாக தொலைபேசி அழைப்பெடுத்து வாகனத்தை கையடி பின்னையார் ஆலயத்திற்கு அருகாமையில் கொண்டுவருமாறு கடத்தலில் ஈடுபட்ட நபர்கள் கூறியுள்ளனர்.

இந்நிலையில், உரிமையாளர் வாகனத்தைக் கொண்டுசென்றபோது மோட்டார்சைக்கிளில் வாகனத்தைப் பார்க்க இருவர் வந்திருந்த நிலையில், ஒருவர் வாகனத்தை செலுத்திப் பார்க்க வேண்டும் எனக்கூறி வாகனத்தை எடுத்துச் சென்றுள்ளார்.

மோட்டார்சைக்கிளில் நின்ற மற்றவர்

வேன் அநாதரவான நிலையில் வேம்பிராயில் மீட்பு

தொலைபேசிக்கு மீள் நிரப்பு அட்டை போட்டு விட்டு வருகிறேன் எனக் கூறி நழுவ முற்பட்ட வேளையில், சந்தேகமடைந்த வானை உரிமையாளர் நாலும் வருகிறேன் எனக் கூறி மோட்டார்சைக்கிளில் ஏறி கடைக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில், உரிமையாளரிடம் பணத்தைக் கொடுத்து மீளநிரப்பு அட்டை வாங்கி வருமாறு தெரிவித்து கடைக்குள் அவரை அனுப்பிவிட்டு மற்றைய நபரும் தப்பித்துச் சென்றுள்ளார்.

குறித்த கடத்தல் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் வேனை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். இந்நிலையில் குறித்த வேன் மீசாலை வேம்பிராய் பொது மயானத்திற்கு அருகாமையில் இலக்கத் தகடுகள் அகற்றப்பட்டு, அநாதரவாக காணப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

கச்சதீவு திருவிழாவில் சங்கிலி அறுப்பு; சந்தேக நபருக்கு 14 வரை விளக்கமறியல்

தமிழக பக்தர் ஒருவருடைய நகை உட்பட இரு பக்தர்களின் தங்கச்சங்கிலியை அறுத்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபரை எதிர்வரும் 14ஆம் திகதிவரையில் விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ஷொலினி ஜெயபாலசந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

கச்சதீவு திருவிழாவில் கலந்துகொண்ட தமிழகத்தைச் சேர்ந்த பெண் பக்தர் ஒருவருடைய 8 பவுண் தங்கச்சங்கிலி ஒன்று அறுக்கப்பட்டுள்ளது.

தான் ஆராதனையில் கலந்துகொண்டிருந்த போது தனக்குப் பின்னால் நின்றிருந்த ஆணொருவர் சங்கிலியை அறுத்ததாகவும் அதனை தான் அவதானித்தபோது, அந்தப் அறுத்த சங்கிலியை தனக்குப் பின்னால் இருந்த பெண் ஒருவரிடம் கொடுத்ததும் அந்த பெண் கூட்டத்திற்குள் கலந்து அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றார் எனவும் சங்கிலியை பறிகொடுத்தவர் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

குறித்த தமிழக பெண்ணுக்குப் பின்னால் நின்று சங்கிலியை அறுத்தார் என்ற குற்றச்சாட்டில் மட்டக்களப்பைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

அதேவேளை, இலங்கையைச் சேர்ந்த பெண்ணொருவரின் ஒன்றரை பவுண் சங்கிலியும் ஆராதனையின்போது களவாடப் பட்டுள்ளது.

அ ப் பெண் ணின் பி ன் னா லும் கைதுசெய்யப் பட்ட நபர் நின்றதை அந்தப் பெண் அவதானித்துள்ளார். இரு பெண்களினதும் சங்கிலியையும் கைதுசெய்யப்பட்டநபரே அறுத்தார் எனும் குற்றச்சாட்டில் சந்தேகநபராக நெடுந்தீவு பொலிஸாரினால் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறை பதில் நீதவான் முன்னிலையில் முற்படுத்தியதை அடுத்து, சந்தேக நபரை 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் தடுத்துவைக்க உத்தரவிட்ட பதில் நீதவான், தப்பிச் சென்றதாக கூறப்படும் பெண் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து அப்பெண்ணை கைதுசெய்ய மன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இளைஞர் தூக்கிட்டுத் தற்கொலை!

யாழ்ப்பாணம் - பாசையூர் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் (05) தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

குறித்த இளைஞர் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அல்லைப்பிட்டி பகுதிக்குச் சென்று அங்குள்ள மரம் ஒன்றில் கயிற்றை கட்டி அதில் தொங்கி உயிர் மாய்த்துள்ளார்.

அவரது கையிலுள்ள வசனங்களை பார்வையிட்ட பொலிஸார், காதல் தோல்வியால் இந்தச் சம்பவம் இடம்பெற்றுக்கலாம் என சந்தேகிக்கின்றனர்.

குறித்த இளைஞரின் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பொலிஸார் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது!

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோண்டாவில் பகுதியில் 150 போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் (05) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கோப்பாய் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கட்டாக்காலி மாடுகளால் சிறுதானியச் செய்கை பாதிப்பு

(சாவகச்சேரி நிருபர்)

கைதடி கமநலசேவை நிலைய எல்லைப் பரப்பிற்குட்பட்ட தனங்களப்பு மற்றும் கைதடி நாவற்குழி பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத்தால் சிறுதானியச் செய்கை மற்றும் நெற்பயிர்ச்செய்கைகள் அழிவடைந்து வருவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கையில்;

தனங்களப்பு மற்றும் கைதடி நாவற்குழி பகுதிகளில் நெல் அறுவடை முழுமையாக நிறைவடையாத நிலையில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது.

குறித்த கட்டாக்காலி மாடுகள் நெல் வயலை சேதப்படுத்துவதுடன், நெல் அறுவடையின் பின்னரான சிறுதானிய செய்கைக்கும் பேரும் ஏற்படுத்தி வருகின்றன. சிறுதானிய செய்கைகள் முட்கம்பியால் அடைக்கப்பட்ட அடைப்பிற்குள் மேற்கொள்ளப்படுகின்ற



போதிலும் சில இடங்களில் முட்கம்பிகள் அவிழ்க்கப்பட்ட நிலையில் காணப்படுவதால் மாடுகள் ஒட்டுமொத்த சிறுதானியத்திற்கும் தேரம் விளைவிக்கின்றன. விவசாய சம்மேளனம் மற்றும் கமநல சேவை நிலையம் ஆகியன விரைந்து நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் சிறுதானிய செய்கைகள் கட்டாக்காலிகளால் முழுமையாக அழிக்கப்படக்கூடிய நிலை காணப்படுகிறது.

வைகாசி 28 வரை கால்நடைகளை கட்டுப்படுத்த வேண்டும் என பொதுவான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளபோதிலும் கால்நடை வளர்ப்போர் பொறுப்பற்ற நடந்துகொள்வதாக மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

வடக்கு தமிழ் – முஸ்லிம் மக்களிடையே விரிசலை ஏற்படுத்த சிறீதரன் எம்.பி. முயற்சி

பலவந்தமாக வெளியேற்றப்பட்ட அமைப்பின் செயலாளர் முஹம்மது நைசர்

(ரஸீன் ரஸ்மின்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் வடக்கு தமிழ் - முஸ்லிம் மக்களிடையில் விரிசலை ஏற்படுத்த முயற்சிக்கின்றார் - என பலவந்தமாக வெளியேற்றப்பட்ட அமைப்பின் செயலாளர் முஹம்மது நைசர் குற்றஞ்சாட்டினார்.

கிளிநொச்சி முஸ்லிம் குடும்பங்களுக்கு 400 வீடுகளை வழங்க ஜனாதிபதி எடுத்துவரும் நடவடிக்கைகளை விமர்சிக்கும் வகையில் ஊடக சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் கருத்தை கண்டிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

1990ஆம் ஆண்டு வீடுதலைப் புலிகள் இயக்கத்தால் இரண்டு மணித்தியாலங்கள் காலக்கெடுவில் வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம் மக்கள் அன்று வெளியேறும்போது ஒரு இலட்சமாக இருந்தவர்கள் இன்று, 32 வருடங்களின் பின் இரண்டு, மூன்று மடங்குகளாக அதிகரித்துள்ளனர்.

எனவே, இவர்களுக்கு உதவி செய்வது இந்த அரசாங்கத்தின் கடமையாக இருக்கிறது. எனவேதான் இந்த நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கிளிநொச்சியில் வாழும் 400 முஸ்லிம் குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பது தொடர்பாக ஆலோசனை செய்து வருவதாக அண்மையில் கருத்தொன்றை வெளியிட்டிருந்தார்.

இந்த நாட்டில் ஆட்சிசெய்த எந்த அரசாங்கமும் வடபுல முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் பற்றி காத்திரமான எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கவில்லை. எனினும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதுபற்றி ஒருவார்த்தை

பேசியிருக்கிறார். அதனை சகித்துக்கொள்ள முடியாமல் ஜனாதிபதியின் கருத்துக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தனது இனவாத கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

அரசாங்கம் முஸ்லிம் மக்களுக்கு மாத்திரம் வீடுகளை வழங்கி கிளிநொச்சி மாவட்டத்தில் ஒற்றுமையாக வாழும் தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒற்றுமையை சீர்குலைக்க முயல்கிறது என்ற கருத்தில் ஆலோசனை சொல்வதாக முஸ்லிம்களுக்கு காணி, வீடு வழங்கக்கூடாது என்று கருத்துப்பட தனது வக்கிர இனவாத கருத்துகளை வெளிப்படுத்தியிருக்கிறார்.

எந்தக்கும் முன்னுதாரணமாக பேசக்கூடிய நீங்களே இவ்வாறு பேசுவது உங்கள் மீது நாங்கள் வைத்துள்ள நன்மதிப்பை, மரியாதையை இழக்கச்செய்யும் என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

தமிழ் மக்கள் தமது உரிமைகளைக் கோரி போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். இந்நிலையில், தமிழர்களின் போராட்டங்களை நாங்கள் ஒருபோதும் கொச்சப்படுத்தியது கிடையாது. அதனை அவர்களின் உரிமை சார்ந்த விடயமாக நாம் பார்க்கிறோம். இரண்டு வருடங்கள் முகாம்களில் வாழ்ந்த மக்களுக்கு துரித கதியில் மீள்குடியேற்றம் என்ற பெயரில் அவர்களுக்குத் தேவையான அத்தனை அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப் பட்டன.

ஆனால், 32 வருடங்கள் தமது சொந்த மண்ணிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப் பட்ட வடபுல முஸ்லிம்கள் விடயத்தில் யாரும் அக்கறை செலுத்தவில்லை. அவர்களின் மீள்குடியேற்ற விடயத்தில் எந்த அரசாங்கமும் கவனம் செலுத்தவில்லை. தொலைத்த இடத்தில்தான் தேட வேண்டும் என்று சொல்வார்கள்.

நீங்கள் வடபுல முஸ்லிம் மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. ஆனால், அவர்களின் மனங்கள் புண்படும் வகையில் பேசுவதை நிறுத்திக்கொள்ளுங்கள். நாங்கள் உங்களிடம் சொத்துகளை கேட்கவில்லை. வாழ்வதற்குரிய உரிமையைக் கேட்கிறோம். எங்களுடைய உரிமைகள் விடயத்தில் கைவைக்க வேண்டாம் என்று கேட்கிறோம்.

வடக்கில் எமது வெளியேற்றம் வேலியே பயிரை மேய்ந்த கதையாக இருந்தது. விடுதலைப் புலிகள் இரண்டு மணிநேர காலக்கெடுவில் எங்களை துரத்தியதை துன்பியல் என்று நீங்கள் ஒரு சிம்பிலாக சொல்கிறீர்கள்.

எதற்காகவும் எமது முஸ்லிம் சமூகம் தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட்டது கிடையாது. தமிழ் மக்களுக்கு கிடைக்கக்கூடிய உரிமைகளை நாங்கள் தட்டிப் பறிக்கவும் முயலவில்லை.

வடக்கில் தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என ஆசைப்படுகிறோம். நாங்கள் நீண்டகாலம் வாழ வந்தவர்கள் அல்ல. கொஞ்ச காலம் வாழ வந்தவர்கள்.

நாம் இந்த அரசாங்கத்திடம் மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகிறோம். வடபுல முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை ஆராய உடனடியாக ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும்.

ஜெனிவா உட்பட சர்வதேச நாடுகளில் அகதிகள், பாதிக்கப்பட்டவர்கள் எனும் பெயர் வருகின்றபோது அதில் வடபுல முஸ்லிம்களும் உள்வாங்கப்பட வேண்டும். எங்களுடைய மக்களுக்கு மீள்குடியேற்றம் முழுமைப்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் – என்றார்.

சிலாபம் முன்னேஸ்வர ஆலய வருடாந்த தேர்த் திருவிழா

(புத்தளம், உடப்பு நிருபர்கள்)

புத்தளம் மாவட்டத்தில் பிரசித்திபெற்றதும் பஞ்ச ஈஸ்வரங்களில் முதன்மை பெற்றதும் சக்தி பீடங்களில் ஒன்றுமான சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதசுவாமி ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா நேற்று (06) இடம்பெற்றது.

ஆலய பிரதான குருவும் தாமகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ எஸ்.பத்தநாகக் குருக்கள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் காலை 9.00 மணியளவில் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதசுவாமி ஆகியோருக்கு வசந்த மண்டப பூஜை இடம்பெற்றது.

பின்னர் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதஸ்வாமி ஆகியோர் உள் வீதி வலம் வந்தனர்.

அலங்கரிக்கப்பட்டிருந்த தேரில் ஆரோகிக்கப்பட்டு பக்தர்கள் புடை சூழ 'அரோகரா' என்ற நாமம் ஒலிக்க மங்கள வாத்தியம் முழங்க தேர்த் திருவிழா வெளி வீதி வலம் வந்தது.

தேர்த் திருவிழாவில் நாட்டின் நாலா பாகங்களிலுமிருந்தும் இன, மத, பேதமின்றி ஆயிரத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டனர்.

கடந்த 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான உற்சவங்கள் தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெற்று வந்தது. இதில் சந்திரசேகர உற்சவம், நடராஜ உற்சவம், சிவபக்த உற்சவம், திருக்கல்யாண உற்சவம், பிக்ஷாடன உற்சவம், மிருக யாத்திரா உற்சவம், வேட்டைத் திருவிழா ஆகிய முக்கிய உற்சவங்கள் இடம்பெற்றதுடன், இன்று (07) தீர்த்த உற்சவத்துடன் பிரம்மோற்சவம் முடிவடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒற்றைக்கண் யானையின் அட்டகாசத்தால் உயிர் அச்சுறுத்தல்: வீதிக்கு இறங்கிப் போராடவும் முஸ்தீபு

(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கவடாப்பிட்டி மற்றும் கண்ணகி கிராமத்தில் யானையின் அச்சுறுத்தல் அதிகரித்துவரும் நிலையில், வீதிக்கு இறங்கிப் போராடுவதற்கும் பிரதேசவாசிகள் தயாராக உள்ளதாக தெரிவித்தனர்.

கவடாப்பிட்டி கிராமத்தில் உள்நுழைந்த யானை, இராசலெட்சுமி என்பவரது வீட்டை உடைத்து அங்கிருந்த நெல்மூடைகளையும் இழுத்துச் சென்றுள்ளது. அத்தோடு இரு தினங்களுக்கு முன்னர் கண்ணகி கிராமத்திலும் தனது அட்டகாசத்தைக் காட்டிய யானை அங்குள்ள குடியிருப்புகளையும் பயிரிடப்பட்ட பயிரினங்களையும் உடமைகளையும் துவம்சம் செய்துள்ளது.

இதேநேரம் அண்மைக்காலமாக கவடாப்பிட்டி, மகாசக்திபுரம், கண்ணகி கிராமம் உள்ளிட்ட அயலிலுள்ள சிறு கிராமங்களிலும் யானையின் தொல்லை அதிகரித்து வருகின்றது. இதனால் அங்கு வாழும் மக்களும் விவசாய செய்கையில் ஈடுபடும் விவசாயிகளும் அச்சத்தில் உறைந்து போயுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, சில மாதங்களுக்கு முன்னர் கண்ணகி கிராமத்தில் யானையின் தாக்குதலுக்குள்ளான பெண்ணொருவர் பலியானதுடன், வயல் பிரதேசத்தில் தாக்கப்பட்ட ஆண் ஒருவரும் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்தார். இந்நிலையில், யானையின் தாக்குதலை

கட்டுப்படுத்த இராணுவத்தினரின் உதவியுடன் பொதுமக்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களை இணைத்து குழுவாக பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுவது எனவும் வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் முடிவெடுக்கப்பட்டதுடன், குறித்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

மேலும், யானை பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் அரசியல்வாதிகளின் கவனத்திற்கு கொண்டுசென்று அரசாங்கத்தின் உதவியைப் பெறவும் ஆலோசனை முன்வைக்கப்பட்டது. ஆனாலும் அரசாங்கமோ அரசியல்வாதிகளோ இதுவரையில் உரிய நடவடிக்கை எடுக்காத நிலையில் தொடர்ந்தும் யானையின் அச்சுறுத்தல் இடம்பெற்று வருவதுடன் ஒற்றைக்கண் யானை ஒன்றே இவ்வாறு தொடர் சேதங்களை ஏற்படுத்தி வருவதாக பொதுமக்கள்

தெரிவிக்கின்றனர்.

ஆகவே, குறித்த யானையை வெளியேற்ற வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர். இல்லாத பட்சத்தில் தாங்கள் வீதிக்கு இறங்கிப் போராடவேண்டிய நிலை வரும் எனவும் தெரிவித்தனர்.

நிந்தவூரில் போதை ஒழிப்புக்கான கலந்துரையாடல்

(மாளிகைக்காடு செய்தியாளர்)

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சமூக ஆதரவுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் சனிக்கிழமை (04 இடம்பெற்றது.

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ரயீஸ் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.சி.எம். பைசால் காசிம், நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினர்கள், உலமா சபை பிரதிநிதி, கோயில் தர்மகர்த்தா, நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சஹீலா இஸ்ஸதீன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிநிதி, கல்முனை பிராந்திய உணவு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், நிந்தவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம்.நஜீம், நிந்தவூர் அனர்த்த முகாமைத்துவ அணியின் பிரதிநிதிகள், நிந்தவூர் ஜும்ஆப் பெரியபள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை பிரதிநிதி, பாடசாலை அதிபர்கள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளென பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

நிந்தவூரில் போதை ஒழிப்பு சமூக ஆதரவு போரம் ஒன்றினை அமைப்பதனூடாக ஊரின் சமூக நலச் செயற்பாடுகளை ஒன்றுக்கு ஒன்று முரண்பாடுகளின்றி நேர்த்தியாக செயற்படுத்த முடியுமெனவும் அதற்கான அடித்தளமாகவே சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் இக்கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ரயீஸ் தெரிவித்தார்.

இதன்போது, நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம்.அஷ்ரப் தாஹிர் உரையாற்றுகையில், போதைப் பாவனையுடன் தொடர்புள்ளவர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கான வழிபடுத்தல்களையும் விழிப்புணர்வுகளையும் ஜும்ஆப் பெரியபள்ளிவாசல் மற்றும் உலமா சபை இணைந்து செயற்படுத்த வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

ஊரிலுள்ள சகல அமைப்புகளையும் உள்ளடக்கிய அனர்த்த முகாமைத்துவ அணி மற்றும் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் கோரிக்கைகளுக்கு அமைவாக போதையுடன் தொடர்புடையவர்களுக்கான மையவாடியில் புறம்பானதொரு பகுதியை ஒதுக்கீடு செய்வதற்கான அனுமதி பிரதேச சபையினால் வழங்கப்பட்டு அங்குரார்ப்பண நிகழ்வினை நடத்துவதற்கு எதிராக நீதிமன்ற கட்டளை பெறப்பட்டு நிந்தவூர் பொலிஸ் நிலையத்தினால் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நீதிமன்ற தடையுத்தரவிற்கு பின்னர் நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளின் ஆலோசனைக்கமைய நிந்தவூர் பிரதேச சபை இடுகாடு சுடுகாடு சட்டத்தைப் பிரயோகித்து இது விடயம் குறித்து காத்திரமான செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

கல்முனை காதி நீதிமன்ற நீதிபதியாக அன்ஸார் மௌலானா நியமனம்

(நாவிதன்வெளி செய்தியாளர்)

கல்முனை காதி நீதிமன்ற நீதிபதியாக சிரேஷ்ட சட்டத்தரணியும் அகில இலங்கை சமாதான நீதவானும் உத்தியோகப்பற்றற்ற நீதவானுமான மருதமுனையைச் சேர்ந்த பளீல் மௌலானா அமீருல் அன்சார் மௌலானா மார்ச் 1ஆம் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் இலங்கை நீதிச்சேவை ஆணைக் குழுவினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மருதமுனையிலும் கிழக்கிலங்கையிலும் புகழ்பெற்ற நன்மதிப்புக்குரிய அன்சார் மௌலானா பேராதனை பல்கலைக்கழக பொதுப் பட்டதாரியும் இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டமாணியுமாவார். இவர் இலங்கை அதிபர் சேவை முதலாம் தரத்தில் சேவையாற்றி ஓய்வு பெற்றவர். இவர் வழக்கறிஞர் உயர் தொழிலில் 25 வருட நிறைவான ஆளுமையையும் மக்கள் நன்மதிப்பையும் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாவடிப்பள்ளி தெரு விளக்கை ஒளிரச்செய்ய காரைதீவு தவிசாளர் உறுதியளிப்பு

(சம்மாந்துறை செய்தியாளர்)

மின்பட்டியல் நிலுவை செலுத்தப்படாமையினால் யானைகள் நடமாட்டம் உள்ள காரைதீவு பிரதேச, காரைதீவு விபுலானந்தா சதுக்கம் முதல் மாவடிப்பள்ளி வரை உள்ள தெரு விளக்குகளின் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த தெருவிளக்குகளை மீள மின்னிணைப்பு செய்து ஒளிரச்செய்ய தான் பிரதேச சபை செயலாளரை பணிக்கவுள்ளதாகவும் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கி. ஜெயசிறில் தெரிவித்தார்.

மாவடிப்பள்ளி அனைத்து பாலர் பாடசாலைகள் சம்மேளன ஆண்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட தவிசாளர், காரைதீவு விபுலானந்தா சதுக்கம் முதல் மாவடிப்பள்ளி வரை உள்ள தெரு விளக்குகளை இரவுநேரங்களில் ஒளிரச் செய்யாமையினால் அவ்வீதியால் பயணிக்கும் பொதுமக்களும், விவசாயிகளும், மாவடிப்பள்ளி மக்களும் படும் கஷ்டங்களை அல்-மீஸான் பௌண்டேஷன் தவிசாளர் எனக்கு எடுத்துரைத்து உடனடியாக அத்தெரு விளக்குகளை ஒளிரச்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்தப் பிரச்சினைகளை நானும் அறிந்துள்ளேன்.

இந்த விளக்குகள் பொருத்தப்பட்டபோது பிரதேச சபையிடம் தெரிவிக்கப்படவில்லை. இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கேட்டபோது அவர்கள் தமக்கு சொந்தமான வேலையென்றும் அதை நாங்கள் தடுக்கப்போகின்றோம் என்ற தோரணையிலும் கருத்து வெளியிட்டனர். காரைதீவு பிரதேச சபை காலத்தில் நாங்கள் கூடிய அபிவிருத்தியை செய்தது மாவடிப்பள்ளியில்தான். இன, மத பேதமில்லாமல் நான் சேவையாற்றியுள்ளேன். என் மீது பலரும் விமர்சனங்களை முன்வைக்கிறார்கள். அவர்களின் விமர்சனங்களுடன் நான் நேரடியாக விவாதிக்கத் தயாராகவுள்ளேன்.

மேலும், கொரோனா காலத்தில் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட போது எதுவும் செய்யாமல் முடங்கிக் கிடந்து மொட்டுக்கு ஆதரவு திரட்டியவர்கள் இப்போதுதான் வெளியே வந்து தங்களை நல்லவர்களாக காட்டிக்கொள்ள என்னை இனவாதியாக சித்தரிக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன், கல்முனை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும், கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியுமான திருமதி ஏ.பி.பாத்திமா நஸ்மியா சனூஸ், காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் எம்.என்.எம்.ரணீஸ், மாவடிப்பள்ளி மேற்கு கிராம உத்தியோகத்தர் எம்.ஐ.ஹஸீனா உட்பட முக்கியஸ்தர்கள், மாவடிப்பள்ளி ஊர்மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

நாம் இலங்கையர்களாக சிந்திக்காமையே இன்றைய பிரிவினை நிலைக்குக் காரணம்

காரைதீவு பிரதேச செயலாளர் ஜெகராஜன்

(மாளிகைக்காடு செய்தியாளர்)

பிரித்தானியர்களிடமிருந்து நாடு சுதந்திரமடைந்தபோது இருந்த பொருளாதார நிலையிலிருந்து நாடு இன்றிருக்கும் பொருளாதார நிலைக்குக் கொண்டு வரப்பட்டமைக்குக் காரணம் நாட்டில் வாழும் மக்களாகிய நாம் இலங்கையர்களாக அன்றி, இன ரீதியாகவும் பிரதேச ரீதியாகவும் சிந்தித்தமையே காரணமென்றும் இதனாலேயே நாடு சமாதானமின்றி சீரழிந்து கொண்டிருக்கிறது எனவும் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் தெரிவித்தார்.

மாளிகைக்காடு கிழக்கு சகவாழ்வு சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "இனங்களுக்கிடையில் சமூக நல்லிணக்கத்தை உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளின்கீழ் ஒன்றுகூடலும், பரிசளிப்பு நிகழ்வும் மாளிகைக்காடு கமு/கமு/அல்-ஹுசைன் வித்தியாலயத்தில் சகவாழ்வு சங்கத்தின் செயலாளர் ஆர்.எம்.தன்ஸீம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர், எமது நாட்டில் அடையாள அட்டை ஏன் அறிமுகம் செய்யப்பட்டது என்ற வரலாற்றை ஆராய்ந்தாலே நாம் எமது நாடு ஏன் இந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம். எமது மூதாதையர்கள் இனங்களுக்கிடையில் வைத்திருந்த ஒற்றுமையை இன்றைய சந்ததிகளும் கட்டியெழுப்ப வேண்டும். மதங்களுக்காக சண்டையிடுபவர்கள் மதங்கள் கூறும் விடயங்களைக் கேட்டு, வழிபட்டு நடப்பதில்லை. சகல மதங்களும் சமூக நல்லிணக்கத்தையும் சகவாழ்வையுமே வலியுறுத்துகின்றன - என்றார்.

HOPE OF YOUTH வேலைத்திட்டத்தின் கீழ் கிழக்கு பல்கலைக்கு ஒருநாள் கள விஜயம்

(சம்மாந்துறை செய்தியாளர்)

GCERF HELVETAS நிதியுதவியுடன் GAFSO நிறுவனத்தின் அமுல்படுத்தலில் செயற்படுத்தப்படும் HOPE OF YOUTH வேலைத்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழக விஜயம் சனிக்கிழமை (04) மேற்கொள்ளப்பட்டது.

கப்சோ நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட சுமார் எட்டு பிரதேச செயலகங்களிலிருந்து இளைஞர், யுவதிகள் "இளைஞர்களின் நம்பிக்கை" பங்கேற்பாளர்கள் இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிலையத்தில் ஒருநாள் களவிஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

அம்பாறை மாவட்ட இளைஞர்களை கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் அன்பாக வரவேற்றதுடன், ஒன்றாக கலந்து சமூக நல்லிணக்கம், வன்முறை தீவிரவாதம் தவிர்த்தல்சார் நோக்கில் கலந்துரையாடினர். இந்நிகழ்வில் பல்கலைக்கழக வாழ்வியல், வன்முறை தவிர்த்தல் பற்றிய விளக்கங்களும் கல்வி அதனுடைய சிறப்பம்சங்களும் இடம்பெற்றதுடன், திறன் விருத்திசார் உளவியல் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இளைஞர்களின் கலைசார் நிகழ்ச்சிகள் அரங்கேற்றப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அதிதிகளாக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி பாரதி, அம்கோர் நிறுவனப் பணிப்பாளர் ராஜன் மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

ஆரையம்பதி சிகரம் பாலர் பாடசாலையின் பாலர் கலை நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் பாலர் பாடசாலை மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (05) நடைபெற்றது. சிகரம் ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் எம்.எச்.எம்.தாஹிர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் தலைவர் ரவூப் ஏ.மஜீத் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எம்.எஸ்.ஏ.றஹீம் மற்றும் சிகரம் சேர் றாசிக் பரீட் வித்தியாலயத்தின் அதிபர் எம்.எப்.அனீஸ், மண்முனைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சியாட் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர். (காத்தான்குடி செய்தியாளர்)

ஜனாஸா செயல்முறை கருத்தரங்கு

மனித மேம்பாட்டு அமைப்பு மற்றும் ஹுசைன் ரஷார்ட் ஜனாஸா அமைப்பு ஆகியவற்றின் அனுசரணையில் "இளைஞர்களை வலுவூட்டுதல் மற்றும் சமுதாய தேவைப்பாடு" எனும் தொனிப்பொருளில் மார்ச் 04ஆம் திகதி முஸ்லிம் ஜனாஸா சம்பந்தமான செயல்முறை கருத்தரங்கு மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் அங்கத்தவர்களுக்கு நடத்தப்பட்டது.

மனித மேம்பாட்டு அமைப்பின் ஸ்தாபகரான எஸ்.ஏ.எம்.அஸ்லம் தலைமையில், அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளரும், மனித மேம்பாட்டு அமைப்பின் தேசிய அமைப்பாளருமான ஐ.எல்.எம். இர்பான் மற்றும் மனித மேம்பாட்டு அமைப்பின் ஆலோசகரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.ஐ.சம்சுதீன் உட்பட பல முக்கியஸ்தர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

இதன்போது, இச்செயன்முறை கருத்தரங்கில் முழுமையாக பங்குபற்றிய 40 அங்கத்தவர்களுக்கு விசேட சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

திருமலையில் 12 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்களுடன் இருவர் கைது

(அப்துல்லாஹ் யாசீம்)

திருகோணமலை, கிண்ணியா பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் 12 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்களுடன் இரண்டு சந்தேக நபர்களை ஞாயிறுக்கிழமை (05) கைதுசெய்துள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியாவிலுள்ள வர்த்தக நிலைய மொன்றில் இப்போலி நாணயத்தாளைப் பயன்படுத்தி பொருட்கள் கொள்வனவு செய்ய முயற்சிக்கும்போது பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, போலி நாணயத் தாளை கொண்டுவந்த நபர் ஒருவர் கையுஞ்சையுப் பட்டார். கையுஞ்சையுப்பட்ட நபரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் கிண்ணியா உதவிப் பொலிஸ் அதிகாரி ராஜித குருசிங்கவின் தலைமையில் இடம்பெற்ற விசாரணைகளையடுத்து, இப்போலி நாணயத்தாள்கள் அச்சிட்ட மற்றுமொரு சந்தேக நபரையும் கையுஞ்சையுதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கையுஞ்சையுப்பட்ட சந்தேக நபர்கள் இருவரை யும் விளாங்கை செய்துவோ, முதற் கட்டமாக ஒரு இலட்ச ரூபா பெறுமதியான போலி நாணயத் தாள்களை அச்சிட்டதாக தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் கிண்ணியா - பெரியாற்றுமுனைப் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர்கள் எனவும் இவர் களிடமிருந்து 12 ஆயிரம் ரூபா நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அச்சிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட கணினி மற்றும் அச்சு இயந்திர மும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இருவரையும் கிண்ணியா சுற்றுலா நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக கிண்ணியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.எச்.சீ. கே.பொன்னாபோ குறிப்பிட்டார். இவ்வாறு போலி யாக அச்சிடப்பட்ட 88 ஆயிரம் ரூபா பெறுமதி யான நாணயத்தாள்கள் கிண்ணியாவில் புழக்கத் தில் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன், அவ்வாறான போலி நாணயத்தாள்கள் தொடர்பில் மக்களை அவதானமாக செயல்படுமாறும் பொலிஸ் நிலையப் பொறுப்புதிகாரி மேலும் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

சிங்களமயப்படுத்தலுக்காக திட்டமிடப்பட்ட மாதுறு ஓயா திட்டம் நிறுத்தப்பட வேண்டும்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லைப் பகுதியான தமிழ் மக்களுக்கு சொந்தமான மயிலந்தனைமடு மாதத்தனை மேய்ச்சல்தரைப் பகுதியில் சிங்களமயப்படுத்தலுக்காக திட்டமிடப்பட்ட மாதுறு ஓயா வலதுகரை திட்டத்திற்கு தமிழ் பிரதேசத்தின் ஒரு அங்குல நிலம் கூட வழங்க முடியாது என்பதுடன், நிதி உதவி வழங்குகின்ற சர்வதேச நிறுவனங்கள் இதனை நிறுத்தவேண்டும் அல்லது உங்கள் அலுவலகங்களுக்கு முன்னால் பாராளுமன்ற உறுப்பினருமான பொன்னம்பலம் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

மயிலந்தனை, மாதத்தனை மேய்ச்சல்தரைப் பகுதிக்கு ஞாயிற்றுக்கிழமை (05) விஜயம் மேற்கொண்டு பண்ணையாளர்களை சந்தித்து அவர்களுடைய பிரச்சினைகளை கேட்டறிந்த பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு காற்றடை பண்ணையாளர்களை அச்சுறுத்தி மாடுகளை வெட்டி அவர்களை பரம்பரையான மேய்ச்சல்தரையிலிருந்து

இன்றேல் நிதி வழங்கும் நிறுவனத்துக்கு முன்னால் போராட்டம் நடத்தப்படும் என்கிறார் கஜேந்திரகுமார் எம்.பி.

ஓடவைப்பதற்காக முழுமூச்சிலான திட்டம் கடந்த வாரங்களாக தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பண்ணையாளர்களின் இந்தப் பிரச்சினைகளை அவர்கள் பல இடங்களில் முறையிட்டுள்ளனர். ஆனால், எந்தவொரு இடத்திலும் அவர்களுக்கான தீர்வு கிடைக்காமல் கேள்விக்குறியான நிலையே காணப்படுகின்றது.

இதேவேளை, கிழக்கு மாகாண ஆளுநர், வனவளத்திணைக்களம், மகாவலி அபிவிருத்தி சபை போன்ற அனைத்து கட்டமைப்புகளும் இங்குள்ள மேய்ச்சல்தரை காணிகளை அபகரிப்பதற்கான நடவடிக்கையில் உதியாக இருக்கின்றன. கிழக்கு மாகாண ஆளுநரின் முழு ஒத்துழைப்புடன் கண்ணுக்கு முன்னால் அவருடைய வழிகாட்டலில் நடக்கின்றதென்றால் எந்தளவுக்கு இந்த இனவாத கட்டதையும் நீதியையும் மதிக்கின்றார்கள்?

எனவே, தமிழ்ப் பிரதேசத்தை இன சுத்திகரிப்பு நடத்துவதற்கும் சிங்களக் குடியேற்றத்தை நடத்தி இங்குள்ள மக்களை பட்டினியில் சாவடிக்கின்ற நடவடிக்கையான மாதுறு ஓயா அபிவிருத்திக்கு நிதி உதவி வழங்குகின்ற சர்வதேச நிறுவனங்களே, நீங்களும் தமிழின சுத்திகரிப்பிற்கு உடந்தையாக இருக்கின்றீர்கள்.

எனவே, உங்களுக்கு இருக்கின்ற நிதியை எந்தவிதமான நிபந்தனையும் போடாமல் சிங்கள இனவாத சித்தாந்தத்திற்கு விலைபோகின்றதற்கு பயன்படுத்தப்படுகின்றது என தெரிந்துவைத்திருக்க வேண்டும். இதை தடுத்து நிறுத்த முன்வரவேண்டும் அல்லது உங்கள் அலுவலகங்களுக்கு முன்னால் தாங்கள் போராட்டங்களை செய்வதை தவிர வேறு வழியில்லை.

கோட்டாபய ராஜபக்ஷ காலத்தில் இந்த விடயங்களைக் கூறி பாராளுமன்றத்தில் பெரிதுபடுத்தி பேசியபோது தற்காலிகமாக நிறுத்துவதாக உத்தரவாதம் தந்தாலும் கூட இன்று முன்னரைவிட தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இன்று ரணில் விக்கிரமசிங்கவை லெல்லப்பிள்ளையாக கருதி காப்பாற்றுகின்ற வேளையில், அவரின் ஆட்சிக்காலத்தில் இந்த இனவாத தமிழ் விரோத செயற்பாடுகள் அனைத்தும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்பதே யதார்த்தம்.

எனவே, நிதி உதவி செய்யும் சர்வதேச நிறுவனங்கள் உடனடியாக கொடுக்கக்கூடிய நிதி உதவிகளை நிபந்தனைகளை விதித்து இங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துகின்றதை செய்யவேண்டும் - என்றார்.

இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் மற்றும் கட்சி ஆதரவாளர்களும் உடன் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

போதியார் புலம்பல்!



ஆர்ப்பாட்டங்களால அரச மாற்ற முடியாதாம் எண்டு தனிச்சு வந்து பதவி எடுத்த ஜனாதிபதி ரணில் சொல்லியிருக்காரு எலுவா?

ஒண்டா தம்பி அரச மாத்த முடியா. ஆனா உன்ன கோட்டாவப்போல மாலதீவுக்கு ஓட ஓட விரட்டுவாங்க எலுவா..? கொஞ்சம் கவனமாக நாலுபக்கமும் பார்த்து காரியத்த நடத்து. நெடுக ஒண்ட குழிபறிப்பு சேட்ட எடுபடாது எண்டத மட்டும் நான் சொல்லிப்போட்டன்.. வாயக்கொஞ்சம் கவனமாக வைச்சுக்கொள்!

ஆலையடிவேம்பில் கௌரவிப்பு நிகழ்வு

(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு கல்வி கோட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் திருக்கோவில் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாக உயர்வு பெற்றிருக்கும் கல்வியலாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் சனிக்கிழமை (04) மாலை நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட விபுலாநந்த புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் கோளாவில் விநாயகர் மகாவித்தியாய மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட விபுலாநந்த புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவர் கலாபூசணம் கே.சந்திரலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஆன்மீக அதிதியாக ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தா சரஸ்வதி மகராஜ் கலந்து கொண்டார்

கோளாவில் விநாயகர் மகா வித்தியாலய மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெறுதுடன், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் சுவாமி ஜீ உள்ளிட்ட அதிதிகளால் சான்றிதழ் மற்றும் பரிசுப்பொதிகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து அக்கரைப்பற்று கோளாவில் மண்ணில் பிறந்து கல்வித்துறையில் பல சாதனைகள் படைத்து திருக்கோவில் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாக உயர்வு பெற்று மண்ணிற்கு பெருமை சேர்த்த கே.கமலமோகனதாஸ் மற்றும் திருமதி மாதுரி மயூரன் ஆகியோரின் சேவையப் பாராட்டி வாழ்த்துப்பாவை இயற்றி வழங்கிய ஓய்வுநிலை அதிபர் வி.கனகரெத்தினம் வாசித்தளிக்க சுவாமி உள்ளிட்டவர்களினால் பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மருதமுனையைச் சேர்ந்த மூவர் சட்ட முதுமாணி பரீட்சையில் சித்தியெற்று சட்ட முதுமாணிகளாக சட்டம் பெற்றுள்ளனர். அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதி எம்.எச்.எம். ஹம்ஸா, பொதுத்துவில் மாவட்ட நீதிபதி ஏ.ஸி.எம்.றில்வான், தென்கிழக்குப் பல்கலைக்கழக சட்ட ஆலோசகர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.ஆர்.எம்.சுல்பி ஆகியோருக்கே கொழும்பு பண்டாரநாயக்க சுராபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மார்ச் 1ஆம் திகதி நடைபெற்ற கொழும்பு பல்கலைக்கழக பட்டப்பின் பட்டமளிப்பு விழாவில் பட்டம் வழங்கப்பட்டது. (கோணாவத்தை செய்தியாளர்)

பெரும்பான்மைக் கட்சிகள் சிதறியுள்ளதை சிறுபான்மையினர் பாடமாகக் கொள்ளவேண்டும்

முன்னாள் அமைச்சர் உதுமாலெப்பை தெரிவிப்பு

(அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)

எமது நாட்டின் அரசியல் வரலாற்றை பின் னோக்கிப் பார்க்கும்போது கடந்த காலங்களில் சிறுபான்மை சமூகங்களின் உணர்வுகளுக்கு மதிப் பளிக்காமல் செயற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன போன்ற பெரிய கட்சிகள் நம் கண்முன்னே அழிந்து சிதறியுள்ள நிலைக்கள் ஏனைய அரசியல் கட்சிகளுக்கு ஒரு பாடமாக அமையவேண்டுமென முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏறாவூர் பிரதேசத்துக்கான ஜனஞ்சலம் காரியாலய திறப்பு விழா முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவருமான அலிசாஹிர் மௌலான தலைமையில் சனிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருஞ் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கலந்துகொண்டிருந்தார்.

இன்போது வழந்துகொண்டு உரையாற்றுக யிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேரிவாதக் கட்சிகள் பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கியும் அமைச்சர் பதவி வழங்கியும் எமது சமூகங்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடுத்தி வருவதுடன், எமது கட்சியை அழிப்பதற்குமான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வின் பதவிக்காலத்தில் நமது நாட்டில் முஸ்லிம் களின் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டபோது நாம் வாக்களித்து பாராளுமன்றம் அனுப்பிய நமது மக்கள் பிரதிநிதிகள் மௌனமாக இருந்த வேளையில் எமது சமூகத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும் பாராளுமன்றத்திலும், சர்வதேசத்திடமும் தன்னந்தனியாக நின்று எமது தேசிய தலைவர் ரவூப் ஹக்கீம் குரல் கொடுத்த வரலாற்றை முஸ்லிம் சமூகம் ஒரு போதும் எளிதில் மறந்துவிடமுடியாது.

இலங்கையில் வாழும் முஸ்லிம்களில் 1/3 வீதமானவர்களே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வருகின்றனர். 2/3 பங்கினர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே சிங்கள, தமிழ் சகோதரர்களுடன் வாழ்ந்து வருகின்றனர். வட கிழக்கு மாகான அரசியல் தலைவர்களும் மக்கள் பிரதிநிதிகளும் வடகிழக்கு மாகானத்திற்கு வெளியே வாழும் முஸ்லிம் மக்களுக்காக தொடர்ந்து குரல் கொடுக்கவேண்டிய தேவை உள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மூத்த அரசியல்வாதிகளான முன்னாள் அமைச்சர் ஹிஸ்புல்லா மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலிசாஹிர் மௌலான ஆகியோர் இணைந்து முஸ்லிம் காங்கிரஸில் அரசியல் பயணம் மேற்கொள்வதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் நமது சமூகத்திற்கான பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களை பாதுகாக்கக்கூடிய நிலைமை உருவாகியுள்ளது. 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தத்தினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் தீர்வு காணப்படாத பல பிரச்சினைகள் உள்ளன. இதுதொடர்பாக தமிழ், முஸ்லிம் தலைமைகள் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு புரிந்துணர்வுடன் தீர்வு காண வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

அகம் மனிதாபிமான வள நிலையத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட சிங்கள இளைஞர்களுக்கான அடிப்படை மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் சமூகத் தொடர்பாடல் தொடர்பிலான பயிற்சிப் பட்டறை சனிக்கிழமை (04) திருகோணமலை குளக்கோட்டம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் தனேல்வரன், நிறுவனத்தின் பிரதி இணைப்பாளர் அ.மதன் ஆகியோர் கலந்துகொண்டதுடன், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் இசைவன் வளவாளராக கலந்துகொண்டு மனித உரிமைகள் தொடர்பில் விளக்கமளித்தார். (கந்தளாய் செய்தியாளர்)

காட்டு யானைகளால் பயிர்ச்செய்கைகள் நாசம்

(நற்பிட்டிமுனை செய்தியாளர்)

நாவிதன்வெளிப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சொறிக்கல்முனை 03 பிரிவில் இரவு வேளையில் கூட்டாகவரும் யானைகளால் செய்கை பண்ணப்பட்ட வீட்டுத்தோட்டப் பயிர்கள், பயன்தரு தென்னை மரங்கள் தேப்படுத் தப்பட்டு வருகின்றன.

அறுவடை முடிந்த நிலையிலுள்ள வயல்களிலுமே கூட்டாகவரும் இந்த யானை களால் தங்களுக்கு உயிர் ஆபத்து ஏற்பட்டு விடுமோ எனவும் மக்கள் அஞ்சுகின்றனர். இங்குள்ள அளவரைப் பிரதேச சூடாவட்ட பிரதேச வயல்களும் யானைகளால் துவம்சம் செய்யப்பட்டுள்ளன.

காட்டு யானைகளிலிருந்து உயிரையும் உடமையையும் பாதுகாக்க யானை விரட்டும் வெடிகளை வழங்க வேண்டுமெனவும் பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கு மார்ச் 27க்கு முன்னதாக நியமனம்

இலங்கை அரச ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் ஜீவராசா ரூபேசன்

(கல்முடி செய்தியாளர்)

2022ஆம் ஆண்டு தங்களுடைய ஆசிரியர் கற்றலை நிறைவுசெய்த கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கு மார்ச் 27ஆம் திகதிக்கு முன்னர் ஆசிரியர் நியமனம் வழங்குவதாக கல்வி அமைச்சர் உறுதியளித்ததாக இலங்கை அரச ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் ஜீவராசா ரூபேசன் தெரிவித்தார்.

கல்விக் கல்லூரி பயிற்சியினை நிறைவுசெய்த ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக கல்வியமைச்சருடன் தான் மேற்கொண்ட சந்திப்பு தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வூடகச் சந்திப்பு மட்டு. ஊடக அமையத்தில் திங்கட்கிழமை (06) இடம்பெற்றது. அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், இது தொடர்பாக நாங்கள் அவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தபோது உறுதிமொழியினை எமக்கு வழங்கியிருந்தார். எனினும், இன்று ஆசிரியர் நியமனங்கள் காலதாமதமின்றி பிற்போட்டிருப்பதாக அண்மையில் அறிவித்தல் வந்திருந்தது. இதனை நாங்கள் ஆராய்ந்து பார்க்கின்றபோது அவர்களுக்கு பரீட்சை நடைபெற்றிருந்தது. பரீட்சையின் பெறுபேறுகள் தாமதமாவதனால் இவர்களது நியமனம் தாமதமாவதாக கதை கூறப்பட்டிருக்கின்றது.

இருந்தபோதும், இவர்களுடைய நியமனத்தினை வழங்குவதற்கு சேர்தல் தினைக்களம் அனுமதி வழங்கியிருக்கின்றது.

அவ்வாறு அனுமதி வழங்கியதன் பிற்பாடு ஏன் இந்த மாணவர்களுக்கான ஆசிரியர் நியமனத்தினை பிற்போடுகின்றார்கள் என்கின்ற பாரிய பிரச்சினை எங்களுக்கு எழுந்திருக்கின்றது.

கடந்த காலத்தில் அரசாங்கத்தின் திடீர் அறிவித்தலின்படி அரச ஊழியர்களின் ஓய்வு பெறுகின்ற வயதெல்லை மாற்றப்பட்டது. இதன் மூலமாக பல ஆசிரியர்கள் ஓய்வு பெற்றிருந்தார்கள். இதனால் பாடசாலையில் பாரிய அளவில் தளம்பல் நிலை ஏற்பட்டிருக்கின்றது. இந்த தளம்பல் நிலையினை சீர்செய்வதற்கு கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களின் நியமனத்தினை விரைவாக வழங்க வேண்டும்.

கல்வி அமைச்சருக்கும் நாம் கோரிக்கைகளை முன்வைக்கின்றோம். தொடர்ச்சியாக பாராளுமன்றத்திலும் இது பற்றிய கருத்துகளை கூறுகின்றார். எங்களுடனான கலந்துரையாடலிலும் இது பற்றிய கருத்துகளை கூறுகின்றார். ஊடகத்திற்கும் தெரிவிக்கின்றார். இருந்தபோதிலும், ஆசிரியர் நியமனத்தினை வழங்குகின்ற காலத்தினை நீட்டிக்கொண்டே செல்கின்றார். இவ்வாறு தொடர்ச்சியாக காலத்தினை நீட்டிக்கொண்டு செல்வதனால் ஆசிரிய மாணவர்களும் பாடசாலை மாணவர்களும் பாதிக்கப்படுகின்றார்கள்.

மேலும், ஆசிரிய மாணவர்கள் மூன்றரை ஆண்டு தவணைக்கால பாடசாலைகளே பயிற்சிக்காக இணைக்கப்பட்டிருந்த கால கட்டத்தில் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. இதனை அதிகரித்து அவர்களுக்கு வழங்குங்கள் என நாங்கள் கேட்டிருந்தபோது அரசாங்கம் அந்தக் கொடுப்பனவை வழங்கவில்லை. இந்தக் காலகட்டத்தில் ஏழை ஆசிரிய மாணவர்கள் கடன் வாங்கியே தங்களது கல்வி நடவடிக்கையை தொடர்ந்திருந்துள்ளனர். அதாவது, அவர்கள் தங்கியிருந்த இடத்திற்கான வாடகை, உணவு, போக்குவரத்து போன்றவற்றிற்கு அதிகபணத்தினைச் செலவு செய்திருந்தார்கள். இதற்கு அவர்கள் வாங்கிய கடனை இன்று செலுத்த முடியாத நிலையில் கஷ்டப்படுவதாக பல ஆசிரிய மாணவர்கள் தொடர்புகொண்டு தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே, இவர்களுடைய இந்தப் பிரச்சினைகளை கருத்திற்கொண்டு மிக விரைவாக ஆசிரியர் நியமனத்தினை வழங்குமாறு நாங்கள் கோரிக்கை விடுக்கிறோம். அவ்வாறு வழங்கப்படாவிட்டால் பாரிய தொழிற்சங்க நடவடிக்கைக்கு செல்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். இது தொடர்பாக கல்வி அமைச்சருக்கு எழுத்து மூலமான அறிவித்தலை வழங்கியிருக்கின்றோம் - என்றார்.

மலேசியாவில் கடும் மழை:

40,000 பேர் வெளியேற்றம்

மலேசியாவில் பல நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையால் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

சிங்கப்பூரை ஒட்டியிருக்கும் ஜோகூர் மாகாணத்தில் மழை வெள்ளத்தில் சிக்கி 4 பேர் உயிரிழந்துள்ள நிலையில், வீடுகளை விட்டு வெளியேறியவர்கள் 200இற்கும் மேற்பட்ட முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் எதிர்வரும் நாட்களில் மழை நீடிக்கும் என்பதால் மக்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு அந்நாட்டு தேசிய பேரிடர் மேலாண்மை அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

பங்களாதேஷ் ரோஹிங்கியா அகதிகள் முகாமில் பாரிய தீ

3 ஆயிரம் வீடுகள் எரிந்து நாசம்; 12 ஆயிரம் பேர் வெளியேற்றம்

பங்களாதேஷில் ரோஹிங்கியா அகதிகள் முகாமில் ஏற்பட்ட தீ விபத்தில் 3 ஆயிரம் வீடுகள் எரிந்து நாசமாகியுள்ளன. 12 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

காக்ஸ் பஜாரிலுள்ள அகதிகள் முகாமில் மியன்மார் இராணுவத்துக்கு அஞ்சி, அற்நாட்டிலிருந்து வெளியேறிய 12 இலட்சத்துக்கும் அதிகமான ரோஹிங்கியா மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அந்த முகாமில் நேற்றுமுன்தினம் திடீரென பற்றிய தீ, மளமளவென அங்குள்ள வீடுகளுக்கு வேகமாக பரவியது. இதனால் பல அடி உயரத்துக்கு தீ கொழுந்து விட்டு எரிந்தது.

தீ விபத்தில் முகாமிலுள்ள 3 ஆயிரம் வீடுகளும், ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும் முற்றிலும் சேதமானதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் அறியப்படாத நிலையில், உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்ததால் பொருட்சேதம் அதிகம் இருக்கும் என தகவல் வெளியாகியுள்ளது. 35 பள்ளிவாசல்கள் மற்றும் அகதிகளுக்கான 21 கற்றல் நிலையங்களும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இந்த தீ விபத்தால் ஏராளமானோர் தங்குவதற்கு இடமின்றி திறந்தவெளியில் தங்கியுள்ளனர்.

உலக செய்திகள்

தொடர் நிலநடுக்கங்களால் அதிரும் உலக நாடுகள்

அந்தமான் நிக்கோபர் தீவுகள், பிலிப்பைன்ஸ் மற்றும் குஜராத் மாநிலத்தில் நேற்று நிலநடுக்கம் உணரப்பட்டது. தொடர் நிலநடுக்கங்களால் உலக நாடுகள் கலக்கத்திலுள்ளன.

துருக்கி, சிரியாவில் கடந்த பெப்ரவரி 6ஆம் திகதி 3 சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. இந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 50,000ஐ கடந்துள்ளது. இதனைத் தொடர்ந்து உலகின் நாடுகளில் தொடர் நிலநடுக்க அதிர்வுகள் ஏற்பட்டு வருகின்றன. குறிப்பாக, நியூசிலாந்து, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, ஜப்பான், இலங்கை, இந்தியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் மிதமானதும் சக்திவாய்ந்த நிலநடுக்கமும் ஏற்பட்டு வருகின்றது.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான அசாம், சிக்கிம், மேகாலயா, ஜம்மு காஷ்மீர், ஹிமாச்சல் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நிலநடுக்கங்கள் அண்மையில் ஏற்பட்டன.

இத்தொடர் நிலநடுக்கங்கள் குறித்து இந்திய தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவன தலைமை விஞ்ஞானி என்.பூர்ணசந்திர ராவ் தெரிவிக்கையில்,

இந்திய டெக்டானிக் பிளேட் ஆண்டுக்கு 5 சென்டிமீற்றர் வீதம் இந்திய கண்டத்தட்டு நகர்வதால் தட்டுகள் இணையும் பகுதியில் அழுத்தம் அதிகரித்து வருகிறது. கண்டத்தட்டுகள் இணையும் பகுதி இமயமலை அடிவாரத்தில் அமைந்துள்ளதால் அங்கு பலத்த நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. இமயமலையில் அமைந்துள்ள உத்தரகாண்ட்டில் நிலநடுக்கம் வர வாய்ப்பு அதிகம் எனத் தெரிவித்தார்.

இந்நிலையில், வங்கக்கடல் பகுதியிலுள்ள அந்தமான் நிக்கோபார் தீவுகளில் நேற்று அதிகாலை 5.0 ரிக்டர் அளவிலும், பிலிப்பைன்ஸில் நேற்று 5.4 ரிக்டர் அளவிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது.

குஜராத்தில் அரபிக் கடலையொட்டிய துவாரகா புனித நகரத்தில் 4.3 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

துருக்கி நிலநடுக்கத்தில் ஆட்டங்கண்ட அடுக்குமாடி இடிந்து வீழ்ந்து தரைமட்டம்

துருக்கியில் கடந்த மாதம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சேதமடைந்த 6 மாடிக் கட்டடமொன்று திடீரென இடிந்து விழுந்து தரைமட்டமாகியுள்ளது.

துருக்கி மற்றும் சிரிய எல்லையில் பெப்ரவரி 6ஆம் திகதி ஏற்பட்ட 7.8 ரிக்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்நிலநடுக்கத்தால் இருநாடுகளிலும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். தொடர்ந்தும் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், வீடுகளை இழந்தோருக்கு புதிய வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், துருக்கியின் சான்லியுர்பா நகரில் வீதியோரம் இருந்த கட்டடம் நிலநடுக்கத்தில் பலத்த சேதமடைந்திருந்த நிலையில், அதிலிருந்தோர் வெளியேற்றப்பட்டு, இடிப்பதற்கான பணிகள் நடைபெற்றுவந்த நிலையில் நேற்றுமுன்தினம் திடீர் என அக்கட்டடம் இடிந்து விழுந்து தரைமட்டமாகியுள்ளது.

கட்டட இடிபாடுகளில் சிக்கியிருந்த ஒருவர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில், மேலும் ஒருவர் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தலைமறைவு

பாகிஸ்தான் அரசுக்கு சேரவேண்டிய பரிசுப்பொருட்களை சட்டவிரோதமாக விற்ற குற்றச்சாட்டில், அந்நாட்டு முன்னாள் பிரதமர் இம்ரான் கானை கைதுசெய்ய வந்த பொலிஸார், அவர் வீட்டில் இல்லாததால் திரும்பிச் சென்றுள்ளனர்.

பிரதமர் பதவி வகித்தபோது, அவருக்கு கிடைத்த பரிசுப்பொருட்களை அரச கருவூலத்தில் ஒப்படைக்காமல், கோடிக்கணக்கான ரூபாவுக்கு விற்றதாக இம்ரான் கான் மீது குற்றச்சாட்டு எழுந்தது. இந்த வழக்கில், அவரால் பிணையில் வெளிவர முடியாதபடி நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. இம்ரான் கான் இல்லத்தில் குவிந்த கட்சித் தொண்டர்கள், பொலிஸாரைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸார் வீட்டிற்குள் சென்று தேடியபோது இம்ரான் கான் அங்கில்லாததால், அடுத்தகட்ட நகர்வு குறித்து சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசிக்க திட்டமிட்டுள்ளனர்.

வரலாற்றில் முதல் முறையாக வைட், நோ-போலுக்கு DRS

கிரிக்கெட் உலகில் நடைபெறும் இருபதுக்கு 20 லீக் போட்டிகளில் முதல் முறையாக வைட், நோ-போலுக்கு டி.ஆர்.எஸ். (மூன்றாம் நடுவருக்கு மேன்முறையீடு செய்தல்) பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் தற்போது நடைபெற்றுவரும் மகளிர் பிரீமியர் லீக் கிரிக்கெட்டில் நடுவர் வழங்கும் வைட், நோ-போல் தொடர்பான தீர்ப்பில் ஆட்சேபனை இருந்தால் அதை எதிர்த்து டி.ஆர்.எஸ். தொழில்நுட்பத்தின்படி அப்பீல் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் டில்லி - பெங்களூர் இடையிலான ஆட்டத்தில் வேகப்பந்து வீச்சாளர் மேகன் ஸ்கட் இடுப்பு உயரம் அளவுக்கு வீசிய பந்துக்கு டில்லி வீராங்கனை ஜெமிமா ரோட்ரிக்ஸ் டி.ஆர்.எஸ்ஸிலிடம்பே நோ-போல் கேட்டு அப்பீல் செய்ததை பார்க்க முடிந்தது. பரிசீனையின் பின் அது நோ-போல் இல்லை என்று அறிவிக்கப்பட்டது. இதேபோல் அன்று இரவு நடந்த உ.பி. வாரியர்ஸ் - குஜராத் இடையிலான ஆட்டத்தில் கடைசி ஓவரில் இரண்டு முறை வைட்க்கு டி.ஆர்.எஸ். கேட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தின் 6 வீர, வீராங்கனைகள் கிரீஸ் நாட்டில் நடைபெறவுள்ள சதுரங்கப் போட்டிக்குத் தகுதி

(யாழ் நிருபர்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 6 வீர, வீராங்கனைகள் கிரீஸில் நடைபெறவுள்ள உலக பாடசாலைகள் சதுரங்கப் போட்டியில் விளையாடுவதற்கு தகுதிபெற்ற மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இவ்வாண்டுக்கான உலக பாடசாலைகள் சதுரங்கப் போட்டி கிரீஸில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் இலங்கை சார்பாக விளையாடத் தகுதியுடைய வீர, வீராங்கனைகளை தெரிவுசெய்வதற்கான தேசிய மட்ட போட்டிகள் அண்மையில் நடத்தப்பட்டன.

இப் போட்டியில் வெற்றிகளைப் பெற்ற யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 6 பேர் உலக பாடசாலைகள் சதுரங்கப் போட்டியில் விளையாடுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர். குறிப்பாக கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் வேணுகானன் நயனகேஷன் 7 வயது ஆண்கள் பிரிவிலும், வேம்படி மகளிர் கல்லூரி மாணவி சிவஞானவேல் நர்த்தவி 15 வயது பெண்கள் பிரிவிலும் தேசிய மட்டத்தில் முதல் இடத்தைப் பெற்று கிரீஸில் நடக்கவுள்ள சதுரங்கப் போட்டியில் விளையாட தகுதி பெற்றுள்ளனர்.

மேலும் இப்போட்டிகளில் யாழ். மாவட்டத்திலிருந்து 13 வயது பெண்கள் பிரிவில் உவைஷாலி மூன்றாம் இடத்தைப் பெற்றும், அ.ஆருத்ரன் 17 வயது ஆண்கள் பிரிவில் நான்காம் இடத்தைப் பெற்றும், பி.பிரதிக்சா 9 வயது பெண்கள் பிரிவில் ஆறாம் இடத்தைப் பெற்றும் இலங்கை அணியில் பங்கு பெறத் தகுதிபெற்றுள்ளனர்.

துப்பாக்கியால் சுட்டு மெஸ்ஸிக்கு அச்சுறுத்தல்

உதைபந்து நட்சத்திரம் லியோனல் மெஸ்ஸியின் மனைவி அன்டோனேலா ரோகுஸ்ஸோவின் குடும்பத்தினருக்கு சொந்தமான பல்பொருள் அங்காடியில் கடந்த 2ஆம் திகதி அதிகாலையில் துப்பாக்கி ஏந்திய மர்மநபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இருசக்கர வாகனத்தில் வந்த மர்மநபர்களில் ஒருவர், அந்த பல்பொருள் அங்காடி வளாகத்திற்கு நடந்துவந்து ஜன்னல்கள் மற்றும் முன் கதவுகள் மற்றும் உலோகத்திலான ஷட்டர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளார். இந்தக் காட்சிகள் அனைத்தும் அந்த வளாகத்திலுள்ள சிசிடிவி காட்சிகளில் பதிவாகியுள்ளது.

தாக்குதல் நடத்தியவர்கள் அந்த வளாகத்தில் இருந்த சுவர் ஒன்றில், மெஸ்ஸி, நாங்கள் உங்களுக்காக காத்திருக்கிறோம். என்று கையால் எழுதப்பட்ட செய்தியையும் மெஸ்ஸியை எச்சரிக்கும் விதமாக எழுதியுள்ளனர். ஆர்ஜெண்டீனாவில் பார்ர்ப்ரவாஸ் என்று அழைக்கப்படும் உதைபந்து வெறியர்கள் இந்தத் தாக்குதலின் பின்னணியில் இருக்கலாம் என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மெஸ்ஸியிடம் இந்த வெறியர்கள் பணம் பறிக்க முயற்சிப்பதாகவும் இந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. சுப்பர்மெர்கேடோ யுனிகோ என்று அழைக்கப்படும் இந்த சுப்பர் மார்க்கெட் மெஸ்ஸியின் மனைவி அன்டோனேலாவின் குடும்பத்தைச் சேர்ந்தது என்றும், அவரது உறவினர் ஒருவரால் நிர்வகிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

நுவரெலியா நகரில் பிரபல உதைபந்து அணியான சன்பேர்ட் அணி வீரர்களுக்கு புதிய சீருடை வழங்கும் நிகழ்வானது அண்மையில் நுவரெலியா சினிசிட்டா மைதானத்தில் நுவரெலியா மாநகர சபையின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து உறுப்பினர் சிவஞ்ஜோதி யோகராஜாவின் தலைமையில் இடம்பெற்றது. (படம் - செ. திவாகரன்)

ஆர்னோல்ட் கிளாசிக் உடற்கட்டுப் போட்டியில் நான்காமிடம் பெற்ற இலங்கை வீரர் புஷ்பராஜ்

35ஆவது ஆர்னோல்ட் விளையாட்டு விழாவின் ஒரு பகுதியாக அமெரிக்காவில் நடைபெற்ற 2023 ஆர்னோல்ட் கிளாசிக் உடற்கட்டுப் போட்டியில் இலங்கை வீரர் லூசியன் புஷ்பராஜ் கப்பர் ஹெவிவெய்ட் எனும் அதிபார பிரிவில் பங்குற்றி 4ஆம் இடத்தைப் பெற்றார்.

ஒஹியோ மாநிலத்தின் கொலம்பஸ் நகரில் கடந்த 2ஆம் திகதிமுதல் நேற்று முன்தினம் (5) வரை இவ்விளையாட்டு விழா நடைபெற்றது. 80இற்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த சுமார் 12,000 போட்டியாளர்களையும் சுமார் ஒரு இலட்சம் பார்வையாளர்களையும் ஒன்றிணைக்கும் வகையில் இவ்விளையாட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போட்டி மில் பங்குபற்றுவதற்கு இலங்கையிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஒரே போட்டியாளர் லூசியன் புஷ்பராஜ் ஆவார். கடந்த வருடமும் இப்போட்டியில் இவர் 4ஆம் இடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. 7 தடவைகள் மிஸ்டர் ஒலிம்பியா பட்டம் வென்ற ஹொலிவூட் டுடிகரும் கலிபோர்னியா மாநில முன்னாள் ஆளுநருமான ஆர்னோல்ட் ஷ்வார்ஸ்நெகர், ஒஹியோ மாநிலத்தின் வேர்த்திங்டன் நகர மேயர் ஜேம்ஸ் ஜே லோரிமேருடன் இணைந்து 1989ஆம் ஆண்டு இவ்விளையாட்டு விழாவை ஆரம்பித்திருந்தார். ஏற்கெனவே, 2018 ஆம் ஆண்டு உலக உடற்கட்டு வல்லவர் போட்டிகளில் சம்பியன் பட்டம் உட்பட சர்வதேச போட்டிகளில் பல்வேறு சம்பியன் பட்டங்களையும் லூசியன் புஷ்பராஜ் வென்றுள்ளார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7